# 01 இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி நிறுவப்படல்

பிரித்தானியர் இலங்கையில் தமது ஆட்சியை நிறுவுதல், அதிகாரத்தை உறுதிப்படுத்துதல், தமது ஆட்சி நடவடிக்கைகளுக்காகப் பல்வேறு அரசியல் யாப்புக்களை அறிமுகப்படுத்துதல் போன்றவற்றில் தெளிவான விளக்கம் பெறுவதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

பிரித்தானியரின் ஆட்சி நிறுவப்படல்

இலங்கையில் பல கட்டங்களில் பிரித்தானியர் ஆட்சி நிலைநாட்டப்பட்டது.

- ❖ கி.பி 1796 இல் பிரித்தானியர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் தமது ஆட்சியை ஸ்தாபித்தனர்.
- ❖ கி.பி 1802 இல் இலங்கையின் கரையோரம் பிரித்தானிய முடிக்குரிய குடியேற்றமாக்கப்பட்டது.
- ❖ கி.பி 1815 இல் கண்டி இராச்சியம் கைப்பற்றப்பட்டது.


பிரித்தானியர் இலங்கையில் தமது அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்வதற்கான பிரதான காரணிகள் இரண்டாகும்.

01. இலங்கையின் அமைவிட முக்கியத்துவம்.

02. இலங்கையில் காணப்பட்ட பெறுமதியான வர்த்தகப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளுதல்.

## இலங்கையின் அமைவிட முக்கியத்துவம்

இந்தியாவைத் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கு ஆங்கிலேயருக்குப் பாதுகாப்பான துறைமுகங்கள் தேவைப்பட்டன. இதற்கேற்ற பல துறைமுகங்கள் இலங்கையின் கரையோரத்தில் அமைந்திருந்தன. இந்தியாவுக்கு நீளமான கடற்கரை காணப்பட்ட போதிலும் இலங்கையைப் போன்று இயற்கையான துறைமுகங்கள் காணப்படவில்லை. திருகோணமலைத் துறைமுகம் அந்த வகையில் முக்கியத்துவம் வாய்ந்ததாகத் திகழ்ந்தது. மேலும் பருவக்காற்றுகள் வீசுகின்ற வழியிலும் இலங்கையின் அமைவிடம் முக்கியத்துவம் பெறுகின்றது.



திருகோணமலைத் துறைமுகம்
படம் 1.1

திருகோணமலைத் துறைமுகம் அமைந்திருந்த கொட்டியாரக் குடாவில் பலமான காற்று வீசும் காலத்திலும் விசேடமாகப் பருவக் காற்று வீசும் காலங்களிலும் அதிகளவிலான கப்பல்களை நங்கூரமிட்டுப் பாதுகாப்பாக வைக்கக் கூடியதாக இருந்தது. அது மட்டுமல்லாது இந்து சமுத்திரத்தில் பயணிக்கும் எதிரிநாட்டுக் கப்பல்களின், கண்களில் படாமல் தமது கப்பல்களைப் பாதுகாக்கக் கூடியதாயிருந்தது. மேலும் இத்துறைமுகத்திலிருந்து, இந்தியாவின் கரையோரங்களைப் பாதுகாக்க முடிந்ததுடன் இந்து சமுத்திரத்தில் பயணிக்கும் எதிரி நாட்டுக் கப்பல்களை மறைந்திருந்து தாக்கவும் முடியுமாயிருந்தது. இந்தியாவில் தமது அதிகாரத்தை நிலைநாட்டுவதற்கான போட்டியில் இறங்கியிருந்த பிரான்சியருக்கும் ஆங்கிலேயருக்கும் பாதுகாப்பான துறைமுகங்கள் தேவைப்பட்டன. இதனாலேயே பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றித் தனது அதிகாரத்தை நிலைநாட்டினர்.

## வர்த்தக நடவடிக்கைகள்

ஐரோப்பிய வர்த்தகர்களின் நோக்கில் பார்த்தால், கிழக்கு உலகில் கறுவா உற்பத்தி செய்யும் பிரதான நாடாக இலங்கை இருந்ததே அதன் முக்கியத்துவத்திற்கான காரணமாகும்.

மேற்கூறிய கூற்றிலிருந்து ஐரோப்பியரான பிரித்தானியர் இலங்கையின் மீது கொண்டிருந்த முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ளமுடியும்.

இந்நாட்டிலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய பல்வேறு வர்த்தகப் பொருட்களுள் கறுவாவும் ஒன்றாகும். ஐரோப்பியர்கள் இந்நாட்டிலிருந்து மிளகு, கராம்பு, ஏலம் போன்ற வாசனைத் திரவியங்களையும் பெற்றுச் சென்றனர்.

அத்தோடு மாணிக்கம், முத்து, யானைத் தந்தம் என்பனவும் இதிலடங்கும். கூடிய விலையைப் பெறும் இப் பொருட்களைத் தொடர்ந்தும் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின், இவை விளையும் நாட்டைத் தாம் கைப்பற்றி ஆள்வதே வழியாகும் என அவர்கள் தீர்மானித்தனர்.

## கரையோரப்பிரதேசங்களில் பிரித்தானியர் ஆதிக்கம் நிலைநாட்டப்படுதல்

1789 இல் பிரான்சில் புரட்சி ஏற்பட்டு, அங்கிருந்த முடியாட்சி ஒழிக்கப்பட்டு, குடியாட்சி ஸ்தாபிக்கப்பட்டது. அவ்வாட்சி முறையைப் பிரபல்யப்படுத்துவதற்காக அதன் அருகாமையில் இருந்த நாடுகளையும் கைப்பற்றி அங்கெல்லாம் குடியாட்சி முறையை உருவாக்கினர். அப்பொழுது ஒல்லாந்தின் மீதும் படையெடுக்கவே அந்நாட்டு மன்னனான ஸ்டெட் ஹோல்டர் (5ம் ஒரேஞ் வில்லியம்) தனது நட்பு நாடான பிரித்தானியாவிற்குத் தப்பியோடினார். பிரித்தானியாவே அப்போது பிரான்சின் எதிரிநாடாகும்.

இச்சந்தர்ப்பத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திய ஆங்கிலேயர், ஒல்லாந்த மன்னரிடமிருந்து கடிதமொன்றைப் பெற்று வந்து இலங்கை ஒல்லாந்த ஆளுநர் பன் எங்கல் பெக்கிடம் ஒப்படைத்தனர். அக்கடிதத்தில், "ஒல்லாந்தரிடம் இருக்கும் இலங்கை பிரான்சியர் வசமாவதைத் தடுத்துக்கொள்வதற்காக, தற்காலிகமாக அதனை ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கவும்" எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இங்கிலாந்தின் கியூ மாளிகையில் ஒல்லாந்து மன்னன் தஞ்சடைந்திருந்த வேளை எழுதப்பட்ட கடிதம் என்பதால் அது கியூ கடிதம் எனப்பட்டது.

இந்நேரத்தில் ஏற்பட்ட குளறுபடியால், இலங்கையின் ஒல்லாந்த ஆளுநர் அதை ஏற்க மறுத்தார். ஆங்கிலேயர் இதனைக் காரணமாக வைத்து 1795 ஆம் ஆண்டில் திருகோணமலைத் துறைமுகத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். அடுத்து யாழ்ப்பாணம், மன்னார், கற்பிட்டி, கொழும்பு, காலி ஆகிய பிரதேசங்களையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். இவ்வாறாக 1796 பெப்ரவரி மாதத்தில் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைத் தமதாக்கிக்கொண்டனர்.

செயற்பாடு

ஆங்கிலேயருக்கு இலங்கை முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தமைக்கான காரணம்;

- ❖ இலங்கையின் அமைவிடமா ?
- ❖ இலங்கையின் வர்த்தகப் பொருட்களா ?

எனும் தலைப்பில் வகுப்பறையில் விவாதம் ஒன்றை மேற்கொள்க.

**இலங்கையின் கரையோரப் பிரதேசம் பிரித்தானியரின் முடிக்குரிய குடியேற்ற நாடாக மாறுதல்**

இவ்வத்தியாயத்தின் எதிர் வரும் பக்கங்களில் ''ஆங்கிலேயராட்சிக்கு எதிரான போராட்டங்கள்'' எனும் தலைப்பில் கலந்துரையாடப்பட்டிருப்பதற்கு ஏற்ப, கி.பி 1797 - கி.பி 1798 காலப் பகுதியில் இலங்கையின் கரையோரப் பகுதியில் ஆங்கில கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி நிர்வாகத்துக்கு எதிரான கிளர்ச்சியொன்று ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற நிர்வாக மாற்றமானது இலங்கையின் கரையோரப் பகுதிகளை பிரித்தானிய முடிக்குரிய குடியேற்றமாக்குவதன் முதற் கட்டமாக அமைந்தது. 1798 முதல் கரையோரப் பகுதிகளை வர்த்தகக் கம்பனியுடன் இணைந்து நிர்வகிப்பதற்கு பிரித்தானிய அரசு தீர்மானித்தது. அதன்படி கி.பி 1797 - கி.பி 1798 கிளர்ச்சியின் பின்னர் பிரித்தானிய அரசும் வர்த்தகக் கம்பனியும் இணைந்து ''இரட்டை ஆட்சி'' முறையை மேற்கொண்டன. இவ்வாட்சி முறை வெற்றியளிக்காமையால் கி.பி 1802 ஆம் ஆண்டு கரையோர நிர்வாகத்திலிருந்து வர்த்தகக் கம்பனி நீக்கப்பட்டது. அன்றுமுதல் பிரித்தானிய முடியினதும் பாராளுமன்றத்தினதும் நிர்வாகத்துக்குட்பட்ட முடிக்குரிய குடியேற்ற நாடாக இலங்கை பிரகடனப்படுத்தப்பட்டது.

## பிரித்தானியர் மலையக இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்கு ஏதுவான காரணிகள்

❖ உள்நாட்டில் சுயாதீன ஆட்சி இருந்தமையானது இது கரையோரப் பிரதேசங்களில் பிரித்தானியர் நடவடிக்கைகளுக்குத் தடையாக அமைந்தமை.
❖ கரையோரப் பகுதிகளில் இடம்பெற்ற ஆங்கிலேயருக்கெதிரான போராட்டங்களுக்கு மலையக அரசன் உதவியமை.
❖ மலையகத்துடனான வர்த்தக நடவடிக்கைகளின் போது மலையகத்துக்கும் கரையோரப் பிரதேசத்துக்குமிடையிலான பாதுகாப்புக் கடவைகளில் மலையக அரசனுக்கு வரிசெலுத்த வேண்டி இருந்தமை. இது ஆங்கிலேயரின் வர்த்தக நடவடிக்கையைப் பாதித்தமை.
❖ பிரித்தானியரின் நிர்வாக நிலையமான கொழும்புக்கும் கடற்படை மத்திய நிலையமான திருகோணமலைக்கும் இடையிலான தரைவழித் தொடர்பை ஏற்படுத்துவதற்கும் மலையக இராச்சியம் தடையாக இருந்தமை.
❖ கொழும்பு - திருகோணமலைக்கிடையிலான தொடர்பை மலையகத்தினூடாக அமைத்துக் கொள்வதற்கு மலையக அரசின் அனுமதி கிடைக்கப்பெறாமை.
❖ கரையோரப் பிரதேசத்தைப் பாதுகாப்பதில் ஏற்பட்ட பாரிய செலவு.

## பிரித்தானியர் கண்டியைக் கைப்பற்றல்

மலையக அரசைக் கைப்பற்றிக் கொள்வதற்கு பிரித்தானியரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளாவன :

❖ 1803 - பிரட்ரிக் நோர்த்தின் ஆக்கிரமிப்பு
❖ 1815 - ரொபட் பிரௌன்றிக்கின் ஆக்கிரமிப்பு

இக் காலத்தில் மலையகத்தை ஸ்ரீ விக்ரம ராஜசிங்க மன்னர் (1798-1815) ஆண்டு கொண்டிருந்தார். அவர் நாயக்கர் (வடுகர்) வம்சத்தைச் சேர்ந்தவர். இவ்வம்சத்தவர்கள் தென்னிந்தியாவில் மலபார் பகுதியில் இருந்து இந்நாட்டுக்கு வந்தவர்களாவர். 1739 ஆம் ஆண்டிலிருந்து கண்டியை ஆட்சி புரிந்தவர்கள் இவ்வம்சத்தவர்களேயாவர். இவர்களுக்கு எதிரான சக்திகள் மலையகத்தில்

உருவாகிக்கொண்டிருந்தன. அவ்வெதிரிகள் மலையகத்தைச் சேர்ந்த சிங்களப் பிரதானிகளாவர். இவர்கள் பரம்பரை பரம்பரையாக உயர் பதவிகளை வகித்துக்கொண்டு. அரச மாளிகையில் ஆதிக்கம் செலுத்திய வண்ணம் உள்நாட்டை நிர்வகித்து வந்தமையால் பெரும் அதிகார பலத்தைத் தம்மகத்தே கொண்டிருந்தனர். அவர்கள் அரச சேவைக்காக வழங்கப்படும் மானியங்களைக் கொண்டு சுகபோகமாக வாழ்ந்து வந்தனர்.

## பிலிமத்தலாவ மகாதிகாரம் அவர்களின் செயற்பாடு

நாயக்க மன்னர்களுக்கு எதிராக செயற்பட்டோருக்குத் தலைமை தாங்கியவர் பிலிமத்தலாவை ஆவார். அவர் நாட்டின் (மகா அதிகாரம்) பிரதம அமைச்சராவார். நாயக்கர்களை வெளியேற்றி விடுவது மட்டுமல்லாமல், தாமே அரசனாவதற்கும் இவர் ஆசைப்பட்டார். எனவே தன்னால் கைப்பாவையாகப் பயன்படுத்தக்கூடிய ஒருவர் எனக் கருதிய கண்ணுசாமி இளவரசரை மன்னராக்கிக் கொண்டார். ஸ்ரீ விக்ரம இராஜசிங்க எனும் பெயருடன் இவர் மன்னராக்கப்பட்டார். (அரசுரிமையாளராகப் பெரும்பாலானோரினால் கருதப்பட்ட முத்துசாமி இளவரசர் ஆங்கிலேயரிடம் தஞ்சமடைந்தார்.) ஸ்ரீ விக்ரம இராஜசிங்க மன்னனைக் கைப்பாவையாக்கிக் கொள்ள பிலிமத்தலாவையால் இயலவில்லை.

தனது எண்ணங்களுக்கு இயைய மன்னன் ஆட்சி செய்யாத போது, தன்னாலேயே அரசனாக்கப்பட்டவனைப் பதவி கவிழ்ப்பதற்கு ஆங்கிலேயரின் உதவியை நாடினான். ஆங்கிலேயர் எதிர்பார்த்திருந்த சந்தர்ப்பம் இவ்வாறு தேசியத் தலைவர்களினாலேயே உருவாக்கிக் கொடுக்கப்பட்டது.


ஸ்ரீ விக்ரம இராஜசிங்க மன்னன்
படம் 1.2

என்றாலும் ஆங்கிலேயருக்கு, மன்னனுக்கு எதிராகப் போர் புரிவதற்குத் தகுந்த காரணம் ஒன்றிருக்க வேண்டும். பிலிமத்தலாவையின் அழைப்பு மட்டும் போதியதாயிருக்கவில்லை. தமது விருப்பத்தைப் பூர்த்தி செய்து கொள்வதற்குக் காரணம் ஒன்றைக் கண்டறிவதற்கு ஆங்கிலேயருக்கு அவ்வளவு காலம் பொறுத்திருக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை. கரையோரத்திலிருந்து மலைநாட்டுக்குச் சென்ற வியாபாரிகள் சிலரது பொருட்களைப் பறிமுதல் செய்து கொண்டு அவர்களது காது, மூக்குகளை வெட்டித் திருப்பி அனுப்பினர். இது தமக்கு இழைக்கப்பட்ட அவமானமாகும் எனக் கூறிக் கொண்டு ஆங்கிலேயர் மலையகத்துக்கு எதிராக யுத்தத்தைப் பிரகடனம் செய்தனர்.

ஆளுநர் பிரட்றிக் நோர்த் அவர்களால் 1803ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கண்டி இராச்சியம் மீதான படையெடுப்பு மிகவும் சிரமத்துக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்டதாகும். கொழும்பிலிருந்து கண்டிக்குச் செல்வதற்கு அக்காலத்தில் ஒற்றையடிப் பாதை அல்லது ‘‘தவளம்’’ எனப்படும் பொதிமாடுகள் செல்லும் பாதையே காணப்பட்டது. அதாவது கண்டியை அடைவதற்கு சீரான பாதையொன்று கூட இருக்கவில்லை.

மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் கண்டியை வந்தடைந்த ஆங்கிலப் படையினர் முத்துசாமி என்பவனை அரசனாக்கி, அவனுடன் தமது விருப்பப்படி ஓர் ஒப்பந்தத்தை செய்துகொண்டனர். ஆயினும் தலைநகரிலிருந்து தப்பியோடி தலைமறவாயிருந்த மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் தனது படையினர் மூலம் எதிர்த்தாக்குதல் மேற்கொண்டு, ஆங்கிலப் படையினரை முற்றாக அழித்ததுடன் முத்துசாமியையும் கொன்றொழித்தான். கண்டி மீது படையெடுத்த ஆங்கிலத் தளபதி மக்டோவல் உள்ளிட்ட ஒரு சிலரே இதன் போது உயிர் தப்பினர். இவ்வாறு ஆங்கிலேயரின் கண்டியைக் கைப்பற்றும் முதல் முயற்சியானது போர்த்துக்கேயரின் எல்லா ஆக்கிரமிப்புக்களையும் போல் தோல்வியிலேயே முடிவடைந்தது.

ஆளுநர் நோர்த் மேற்கொண்ட கண்டி மீதான படையெடுப்பு தோல்வியில் முடிவடைந்த போதிலும் ஆங்கிலேயரின் கண்டியைக் கைப்பற்றும் நோக்கம் இல்லாமற் போகவில்லை. ஆளுநர் நோர்த்தின் ஆக்கிரமிப்பு தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் மீளெழாமல் ஆங்கிலேயர் அவதானத்துடன் செயற்பட்டனர். நோர்த்தை அடுத்து கரையோரப்பகுதி ஆளுநரான தோமஸ் மெயின்லண்ட் (1805 - 1812) கண்டி இராச்சியத்துடன் சுமுகமான உறவைப் பேணி வந்தார். கண்டி இராச்சியத்தைப் போரின் மூலம் கைப்பற்ற முடியாதென்பதை உணர்ந்த தோமஸ் மெயின்லண்ட் பிரித்தானிய அரசாங்கத்தின் ஆலோசனைப்படி கண்டி மன்னனுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள முனைந்தார். அதேவேளை மலையகத்தின் நிலைமைகள், மற்றும் பிரதானிகளுக்கும் மன்னனுக்குமிடையிலான உறவுகள் என்பவற்றைத் தந்திரமாக அறிந்துகொள்ளும் பொருட்டு சிவில்சேவை உத்தியோகத்தரான ஜோன் டொயிலியை நியமித்தார்.

## ரொபட் பிரௌன்றிக் (1812 - 1820)



ரொபட் பிரௌன்றிக்
படம் 1.3

கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்கான அடுத்த முயற்சியை மேற்கொண்டவர் ஆளுநர் ரொபட் பிரௌன்றிக் ஆவார். அவர் ஆயுத பலத்தைவிட தந்திரத்தால் கண்டியைக் கைப்பற்ற விரும்பினார். இவ்விடயத்தில் சிங்கள மொழியையும் கலாசாரத்தையும் நன்கறிந்த ஜோன் டொய்லி என்பவர் ஆளுநருக்கு உதவினார். ஜோன் டொய்லி மலையக அரச பிரதானிகள், பௌத்த பிக்குகள் முதலானோருடன் நன்கு பழகி அவர்களது கருத்துக்களை அறிந்து கொண்டதுடன் கண்டி இராச்சியத்தின் பலம், பலவீனம், மன்னனின் படைப்பலம், கரைநாட்டிலிருந்து கண்டிக்கான பாதைகள் மற்றும் தகவல்களை அறிந்து கொண்டார். அரசனின் செல்வங்கள் ஒளித்து வைக்கப்பட்டிருக்கும் இடம், யுத்த காலத்தில் மன்னன் மறைந்திருக்கும் இடம் முதலியவற்றையும் அறிந்து கொண்ட டொய்லி ஆளுநரின் ஆலோசனைப்படி உயர்தரமான பிரித்தானிய மதுபானங்களையும் மன்னனுக்கு அனுப்பி அவற்றுக்கு மன்னனை அடிமையாக்கினான். எனவே நீண்டகாலம் செல்லும் முன்னர் கண்டியைக் கைப்பற்றுவதற்கான பின்னணி 1814 ஆம் ஆண்டளவில் உருவானது.

## 1815 மலையக ஆக்கிரமிப்பு

ஸ்ரீ விக்ரம இராஜசிங்கனின் நடவடிக்கைகள் பிரதானிகளாலும், பொதுமக்களாலும், மதகுருமாராலும் வெறுக்கப்பட்டன. மன்னர் தமது நாயக்க பிரதானிகளுக்குக் கூடிய சலுகைகளை வழங்குதல், சிங்களப் பிரதானிகளின் சலுகைகளைப் பறித்தல், கொடூரமான தண்டனைகளை வழங்குதல், பௌத்த குருமாருக்கும்கூட மரணதண்டனை விதித்தல், பொதுமக்களிடம் இராஜகாரிய முறையின் கீழ் கடுமையாக வேலை வாங்குதல், மல்வத்த பீடத்தின் வழிபாட்டிடத்தை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு ஆலோசித்தல் போன்ற நடவடிக்கைகளால் வெறுப்பைச் சம்பாதித்திருந்தார்.

மன்னனைப் பதவியில் அமர்த்தியவர்களே மன்னனுக்கு எதிராகச் செயற்படத் தொடங்கினர். பிரதம அமைச்சரான பிலிமத்தலாவையே மன்னனின் எதிரியானார். 1811இல் மன்னனைக் கொல்வதற்கு அவர் வகுத்த சதி அம்பலமாகவே மரணதண்டனைக்கு உட்படுத்தப்பட்டார். அவரை அடுத்து அப்பதவிக்கு வந்த எஹலபொலையும் மன்னனுக்கு எதிராக சப்ரகமுவையில் கிளர்ச்சி ஒன்றை ஏற்படுத்தினார். அது தோல்வியடையவே, 1814 இல் ஆங்கிலேயரிடம் தஞ்சமடைந்தார்.

பிரதம அமைச்சரான எஹலபொலையின் இராஜ துரோகச் செயலுக்கு உதவி புரிந்ததற்காக 47 தலைவர்களுக்கும், எஹலபொலவின் மூன்று பிள்ளைகளுக்கும், அவரது மனைவிக்கும், ஏனைய நாயகிகள் மூவருக்கும் கொடூரமான முறையில் மரணதண்டனை வழங்கப்பட்டது.

செயற்பாடு :
மன்னன் “ஸ்ரீ விக்ரம இராஜசிங்கனுக்கு எதிர்ப்புக்கள் ஏற்பட்டமைக்கான காரணங்கள் யாவை?

இக்கொடூர அரசனைப் பதவி கவிழ்ப்பதற்கு மலை நாட்டுத் தலைவர்கள் ஆங்கிலேயரின் உதவியை நாடினர். சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்த ஆளுநர் ரொபட் பிரௌன்றிக் இதனை மிகச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டார்.

இவர் மலைநாட்டு மக்களை கொடூரமான அரசனிடமிருந்து காப்பாற்றுவதற்காக என்று கூறிக் கொண்டு மலையக மன்னனுக்கு எதிராகப் போர்ப்பிரகடனஞ் செய்தார். மலைநாட்டவர்களின் எதிரி மன்னனேயன்றி ஆங்கிலேயரல்ல என்பதை ஏற்கச் செய்யும் வண்ணம் அவர் செயற்பட்டார். ஆங்கிலேயர்கள் மலையகத்தை ஆக்கிரமிக்க வரவில்லை, அம்மக்களின் அழைப்பை ஏற்றே வந்தோம் என்பதை மக்களை நம்பச் செய்தனர்.


ஸ்ரீ விக்ரம ராஜசிங்கனின் மனைவி ரங்கம்மா

அடுத்து கண்டி இராச்சியம் மீது ஆங்கிலேயர் இரண்டாவது படையெடுப்பு வெற்றியடைந்தமைக்கான காரணங்களின் மீது கவனஞ் செலுத்துவோம்.

நோர்த் படையெடுத்த போது மலைநாட்டில் இருந்த அதேபௌதிகச் சூழலே இப்போதும் இருந்து வந்தது. ஆனால் நோர்த்திற்கு மக்கள் காட்டிய எதிர்ப்பு பிரௌன்றிக்கிற்கு இருக்கவில்லை. அத்தோடு எஹலபொலையின் வழிகாட்டுதல் ஆங்கிலேயருக்குப் பெரும் துணையாயிருந்தது.

எஹலபொலையை அடுத்து பிரதம அமைச்சரான மொல்லிகொடையும் எதிர்ப்பைக் காட்டாது பின்வாங்கினார்.

மூவாயிரம் பேரை உள்ளடக்கிய எட்டுப் படையணிகள், எந்தவித எதிர்ப்பும் இன்றி கண்டியை அடைந்தன.

1815 பெப்ரவரி 18 ஆம் திகதி எஹலபொலையும் கூட்டத்தினரும் தமது மன்னனையும் மகாராணியையும் பிடித்து ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தனர்.

ஒழிந்திருந்த மன்னனையும் மகாராணியையும் கண்டு கோபமுற்ற அவர்கள், மகாராணியின் காதிலிருந்த தோடுகளைக்கூடப் பறித்தெடுத்தனர். அப்போது சொட்டிய குருதியால் நனைந்த மகாராணியின் சட்டையை கொழும்பு நூதனசாலையில் இன்றும் காணலாம்.

1505ஆம் ஆண்டிலிருந்து மூன்று நூற்றாண்டுகளுக்கும் மேலாக போர்த்துக்கேய, ஒல்லாந்த ஆங்கிலேய ஆட்சியாளர்களால் கைப்பற்ற முடியாதிருந்த கண்டி இராச்சியம் இறுதியாக 1815 ஆம் ஆண்டில் பிரித்தானியரிடம் தனது சுதந்திரத்தை இழந்தது. அதற்கான அடிப்படைக் காரணமாயமைந்தது, மன்னன், பிரதானிகள் , பொதுமக்கள், இடையே காணப்பட்ட சுமுக உறவு அற்று மக்களின் விசுவாச உணர்வு மறைந்து சென்றமையாகும். யுத்தமொன்றின் முடிவில் வெற்றி பெற்ற அணிக்கும், தோல்வியுற்ற அணிக்கும் இடையே ஒப்பந்தம் ஒன்று ஏற்படுவது சாதாரணமான நிகழ்ச்சியே. ஆனால் 1815 மார்ச் 2 ஆம் திகதி கண்டி அரச சபை மண்டபத்தில் வெற்றி பெற்ற இரு அணிகளுக்கு இடையே கண்டி ஒப்பந்தத்துக்கான நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டன.

ஆளுநர் பிறவுன்றிக்கும் கண்டிப் பிரதானிகள் சிலரும் மார்ச் மாதம் 10ம் திகதியே அவ்வொப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். எஹலபொல உள்ளிட்ட கண்டி பிரதானிகள் சிலர் அதற்கும் பின்னரே ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.


மார்ச் மாதம் 2ம் திகதி ஒப்பந்தத்தின் வாசகங்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் அதில் எந்தவொரு தரப்பினரும் கைச்சாத்திட முன்னர் அச்சமயம் காற்றில் கம்பீரமாக அசைந்தாடிக் கொண்டிருந்த சிங்கக் கொடி ஆங்கிலேயன் ஒருவனால் கீழிறக்கப்பட்டு பிரித்தானியக் கொடி கம்பத்தில் ஏற்றப்பட்டது. இச் செயலால் கோபமுற்ற வாரியபொல ஸ்ரீசுமங்கல தேரர் உடனடியாக பிரித்தானியக் கொடியை கீழிறக்கி சிங்கக் கொடியை ஏற்றியதாகக் கூறப்படுகின்றது. இதிலிருந்து

தெளிவாகும் உண்மை யாதெனில் பிரித்தானியர் கண்டி இராச்சியத்தை பொறுப்பேற்பதை விரும்பாத குழுவினர் அவர்களுக்கெதிரான சுதந்திரப் போராட்டத்தை 1815 மார்ச் 2ம் திகதியே ஆரம்பித்து விட்டனர் என்பதாகும்.

செயற்பாடு :

1803 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கண்டிப் படையெடுப்பு தோல்வியில் முடிவடைந்ததற்கும் 1815 இல் அது வெற்றி பெற்றதற்குமான காரணங்களைப் பட்டியலிடுக.

1815 கண்டி உடன்படிக்கை இலங்கை வரலாற்றின் முக்கிய கால கட்டமொன்றின் அடையாளமாகும். அதாவது 2000 ஆண்டுகளுக்கும் மேலாக சுயாதீனமான நாடொன்றாகத் திகழ்ந்த இலங்கை முழுமையாக அந்நியராட்சியின் கீழ் அடிமைப்பட்டது இவ்வுடன்படிக்கை மூலமேயாகும்.




கண்டி உடன்படிக்கையின் பிரதி
படம் 1.5

## 1815 கண்டி உடன்படிக்கை

இது 12 வாசகங்களைக் கொண்டது. அவற்றுள் சில வருமாறு.

- 01 ஆம், 02 ஆம், 03 ஆம் வாசகங்கள்; ஸ்ரீ விக்ரம இராஜசிங்கன் மிக மோசமான ஆட்சியாளன் என்றும் அவன் ஆட்சியிலிருந்து பதவி கவிழ்க்கப்பட்டதாகவும் அவனது இனசனத்தவர்களுக்கும் சிம்மாசன உரிமை இல்லை என்றும் அவனது ஆண் உறவினர்கள் பிரித்தானிய அரசாங்கத்தின் அனுமதியின்றி கண்டி இராச்சியத்துள் பிரவேசிக்க முடியாதென்றும் கூறுகின்றன.

- 04 ஆம் வாசகத்தில் ஆங்கிலேயராட்சிக்குக் கீழ்ப்பட்ட கண்டி இராச்சிய அதிகாரிகளினதும் மக்களினதும் உரிமைகள், அதிகாரங்கள், சிறப்புரிமைகள் என்பவறைப் பாதுகாக்கும் வகையில் தேசிய முறைப்படி ஆட்சி செய்வதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

- 05 ஆம் வாசகத்தில்; புத்த சாசனமும், வேதாகமும், விகாரைகளும், தேவாலயங்களும் பாதுகாக்கப்படும் என்றும் பௌத்த பிக்குகள் பாதுகாக்கப்படுவர் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

- 06 ஆம் வாசகத்தின் மூலம் அங்கங்களைச் சேதப்படுத்தும் தண்டனை முறை நீக்கப்பட்டது.

- 07 ஆம் வாசகத்தில் ஆளுநரால் அனுமதிப் பத்திரம் வழங்கப்படாத எவரும் மரண தண்டனை வழங்க முடியாது எனக் கூறப்பட்டுள்ளது.

- 08 ஆம் வாசகத்தின்படி சிங்களப் பிரசைகளின் வழக்கு விசாரணைகளை நடத்தும் அதிகாரம் மலையகப் பிரதானிகளுக்கு வழங்கப்பட்டது.

## பிரித்தானிய ஆதிக்கத்திற்கு எதிரான நடவடிக்கைகள்

இலங்கையர் பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக மேற்கொண்ட மூன்று நடவடிக்கைகள் வரலாற்றில் பதிவாகி உள்ளன. அவையாவன :

- 1797 - 1798 இல் ஆங்கில கிழக்கிந்திய வர்த்தக நிறுவனத்திற்கு எதிரான போராட்டம்
- 1818 இல் மலையகத்தின் முதலாவது சுதந்திரப் போராட்டம்
- 1848 இல் விடுதலைக்கான கிளர்ச்சி

நாங்கள் 1797 - 1798 இல் ஆங்கில கிழக்கிந்திய வர்த்தக நிறுவனத்திற்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய விடயங்களைப் பரிசீலித்துப் பார்ப்போம். 1796 இல் இவர்கள் இலங்கையின் கரையோரப் பிரதேசத்தைத் தமதாக்கிக் கொண்டனர். அதற்காகப் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட வேண்டி நேர்ந்தது. நாடுகளைப் பிடித்து ஆள்வதின் பிரதான நோக்கம் இயன்றளவு இலாபத்தை உழைத்துக் கொள்வதாகும். இதனால் மேற்கொண்ட செலவுகளுக்கு மேலாகவும் இலாபத்தைச் சம்பாதிக்க எத்தனிப்பது வர்த்தக நிறுவனங்களின் இலக்காகும்.

ஆங்கில கிழக்கிந்திய வர்த்தக நிறுவனம் இலங்கையைக் கைப்பற்றியது, ஒல்லாந்து மன்னன் வழங்கிய 'கியூ' கடிதத்தின் அடிப்படையிலாகும். மன்னன் மீளவும் ஒல்லாந்துக்கு அதிபதியானால், இலங்கையைத் திருப்பிக் கொடுக்க நேருமோ என்ற அச்சம் அவர்களுக்கு இருந்தது. எனவே எவ்வளவு விரைவாக முடியுமோ, அவ்வளவு விரைவாக யுத்தச் செலவை ஈட்டுவதற்குக் கீழ்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

❖ நடைமுறையில் இருந்தவற்றிற்கு மேலாகப் புதுப்புது வரிகளை அறிமுகப்படுத்தியமை

❖ அக்காலத்தில் அறுவடையில் ஒரு பகுதியினை வரியாகச் செலுத்தும் முறைக்குப் பதிலாகப் பணமாகப் பெற முனைந்தமை.

❖ சுதேச வரி வசூலிப்பாளர்களுக்குப் பதிலாக, இந்தியாவில் ஆங்கிலேயரிடம் இப்பணியில் ஈடுபட்டிருந்த 'அவுமில்தார்' களை ஈடுபடுத்தியமை.

❖ தென்னை மரங்கள் பத்திற்கு மேல் சொந்தம் கொண்டிருந்த உரிமையாளர்களுக்கு புதிய வரிவிதித்து அதைப் பணமாகச் செலுத்த உத்தரவிட்டமை.

❖ வரியை ஏல விற்பனை மூலம் வசூலிக்க முயன்றமை.

வர்த்தக நிறுவனத்தின் மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகள், இந்நாட்டு மக்களின் கடுமையான எதிர்ப்புக்கு ஆளானது. வரி வசூலிப்பதற்காக வந்த இந்திய உத்தியோகத்தர்களுக்கு இந்நாட்டின் மொழியோ, கலாசாரமோ, பழக்கவழக்கங்களோ தெரியாதிருந்தது. அவர்களின் ஒரே நோக்கம் இயன்றளவுக்கு நிறுவனத்திற்கு வரி வசூலித்துக் கொடுப்பதாகும். இவர்கள் நிர்வாக அதிகாரத்தை மட்டுமன்றி, நீதி அதிகாரத்தையும் கையாண்டதாகவும் தெரிகிறது. இதுவரை இருந்து வந்த இராஜகாரிய முறை வெகு தளர்வானதொன்றாயிருந்து வந்தது. சிலர் சிறியதொரு வேலையைச் செய்துவிட்டோ, வேலையே செய்யாமலோ தப்பியிருப்பதற்குப் பழகியிருந்தனர். அறுவடையிலிருந்து வரி செலுத்தும்போது குறிப்பிட்ட அளவைச் செலுத்தாது அல்லது ஒன்றையுமே செலுத்தாது தப்பிக் கொள்வதற்குப் பழக்கப்பட்டிருந்தார்கள். கரையோர மக்களில் பெரும்பாலானோர் பத்துத் தென்னை மரங்களுக்கு மேல் நட்டிருந்தனர். பெரும்பாலும் காய்க்காத மரங்களுக்கும் அவர்கள் வரி செலுத்தக் கோரப்பட்டனர். மேலும் இலங்கையில் பணப்புழக்கம் இருக்கவுமில்லை. அவ்வாறான ஒரு நிலையில் பணத்தால் வரியைச் செலுத்தக் கட்டளையிட்டது மக்களுக்குப் பெருந்துன்பமாயிருந்தது.

இந்நிலையில் 1797 இல் ஆங்கிலேயர் கரையோரப் பிரதேசங்களில் ஆதிக்கத்தைப் பெற்று ஒரு வருடமாவதற்குள், அவர்களுக்கு எதிராக அங்கு எதிர்ப்பு நடவடிக்கைகள் தோற்றம் பெற்றன. இதற்கு அதிகாரத்தை இழந்திருந்த ஒல்லாந்த நிர்வாகிகளினதும் ஆதரவு கிடைக்கப் பெற்றது. கண்டி மன்னரும் கலவரத்திற்கு ஆதரவு வழங்கினார்.

பல்வேறு நாடுகளிலும் இவ்வாறான கிளர்ச்சிகளுக்கு முகம் கொடுத்துப் பழக்கப்பட்டிருந்த கிழக்கிந்திய வர்த்தக நிறுவனத்தை நாட்டைவிட்டு அகற்ற முடியவில்லை. அவர்கள் ஆயுத பலத்தால் கலவரத்தை அடக்கி ஒடுக்கிவிட்டனர். இதனால் அநியாயமாக மக்கள் இறக்க நேரிட்டது. வர்த்தக நிறுவனத்தின் பலம் நன்கு உறுதியானது.

கலவரம் அடக்கப்பட்ட விதம் கொடூரமானது என்ற விடயம் பிரித்தானிய அரசாங்கத்தால் உணரப்பட்டது. வர்த்தக நிறுவனம் ஆண்டாலும் அதில் தாய் நாடான பிரித்தானியாவிற்கும் ஒரு பொறுப்பிருந்தது. இதனால் கிளர்ச்சி தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள மியூரன் என்பவரின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

இக்குழு தமது தீர்ப்பில், வர்த்தக நிறுவனத்தின் செயற்பாடு கொடூரமானது எனத் தீர்ப்பளித்தது. புதிய வரி ஏற்பாடுகள் இரத்துச் செய்யப்பட வேண்டும் என்றும் சிறந்ததொரு ஆட்சிக்கு பிரித்தானிய அரசாங்கத்தின் பங்குபற்றுதலும் இருக்க வேண்டும் என்றும் சிபார்சு செய்தது.

இதன்படி பிரித்தானிய அரசாங்கத்தின் சார்பில் முதலாவது ஆளுநராக பிரட்ரிக் நோர்த் நியமனம் செய்யப்பட்டார்.

## 1818 - சுதந்திரப்போராட்டம்

ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் வந்த கண்டி இராச்சிய நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஆளுநர் தனது பிரதிநிதியாக ''றெசிடன்ட்'' எனும் நிரந்தர வதிவிட அதிகாரியை நியமித்தார். இப்பதவியானது கண்டியைக் கைப்பற்ற உதவி செய்த ஜோன் டொயிலிக்கே வழங்கப்பட்டது

1815 இல் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுமாறு ஆங்கிலேயருக்கு அழைப்பு விடுத்தமையானது வரலாற்றில் தாம் செய்த தவறு என்பதை உணர்வதற்கு கண்டிப் பிரதானிகளுக்கு நீண்டகாலம் செல்லவில்லை.

எனவே 1818 இல் ஆங்கிலேயர் ஆட்சிக்கெதிரான முதலாவது கிளர்ச்சி மலையகத்தில் இடம் பெற்றது. இக்கிளர்ச்சிக்கான காரணிகளாவன.

- ❖ பௌத்த பிக்குகள் புறக்கணிக்கப்பட்டமை.
- ❖ கண்டிப் பிரதானிகள் அதிருப்தியடைந்தமை
- ❖ பொது மக்கள் வெறுப்படைந்தமை
- ❖ கண்டி சிம்மாசனத்துக்கு உரிமையாளன் ஒருவன் வெளிப்பட்டமை.

## பௌத்தபிக்குகள் புறக்கணிக்கப்பட்டமை

இலங்கைச் சமுக அமைப்பில் பௌத்த பிக்குகளுக்கு மதிப்பும் கௌரவமும் உயர்வாக இருந்து வந்தது. மக்கள், பிரதானிகள் மாத்திரமன்றி மன்னர்களும் பிக்குகளை வணங்கி, தானங்களையும் வழங்கி வந்தனர். ஆயினும் ஆங்கில ஆட்சியாளர்களால் பிக்குகள் புறக்கணிக்கப்பட்டனர். பன்சலைகளுக்கு வருமானங்களும் குறைவடைந்தன. 1815 ஒப்பந்தப்படி புத்த சாசனத்தைப் பாதுகாப்பதற்கு ஆட்சியாளர்கள் அனுசரணை வழங்கவில்லை. கிறிஸ்தவர்களான ஆங்கிலேயர்களுக்கு சிங்கள மன்னர்களைப்போன்று பிக்குகளை வணங்கவோ

தானங்களை வழங்கவோ முடியவில்லை இதன்மூலம் கண்டி ஒப்பந்தம் எழுத்தில் மாத்திரமே இருந்தது என்பது புலனாகிது.

## கண்டிப்பிரதானிகள் அதிருப்தியடைந்தமை

ஆங்கிலேயர் கண்டியை ஆக்கிரமிப்பதற்கு உதவிகளைச் செய்தவர் எஹலபொல மகா அதிகாரமாவார். ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனை பதவி கவிழ்த்த பின்னர் ஆங்கிலேயர் தன்னைக் கண்டி இராச்சியத்துக்கு அரசனாக்குவர் என்று எஹலபொல நினைத்திருந்தார். நீண்டகாலமாகவே கண்டி இராசதானியில் அதிகளவிலான சலுகைகளையும் வரப்பிரசாதங்களையும் அனுபவித்த பிரதானிகள் மக்களின் கௌரவத்திற்கும் மதிப்புக்கும் உரியவர்களாய் காணப்பட்டனர். அதே போன்று நிந்தகக் காணிகளில் இருந்து அதிக வருமானங்களையும் ஈட்டினர். ஆயினும் 1815 ஆம் ஆண்டின் பின்னர் இந்நிலை மாறி பிரதானிகளும் அரசுக்கு வரி செலுத்த வேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டனர்.

கண்டி மன்னராட்சிக் காலத்தில் பிரதானிகளுக்கு தலைநகரிலிருந்து வெகுதூரம் வரை தமது உரிமைகளை அனுபவிப்பதற்கு அதிகாரமிருந்தது. ஊவா வெல்லஸ்ஸ என்பது கண்டி இராச்சியத்தின் தூரப் பிரதேசமாகும். அங்கிருந்த பிரதானிகள் தமது அதிகாரங்கள் பறிக்கப்பட்டதை உடனடியாக உணர்ந்தனர். அப்பகுதிக்கு ஹஜ்ஜி மரிக்கார் எனும் முஸ்லிம் முகாந்திரம் நியமிக்கப்பட்டமையால் சிங்களப் பிரதானிகள் ஆங்கிலேயராட்சியில் அதிருப்தி அடைந்தனர்.

## பொதுமக்கள் வெறுப்படைந்தமை

தமது கௌரவத்துக்கும் மதிப்புக்கும் பாத்திரமான பௌத்தபிக்குகளும் பிரதானிகளும் ஆங்கிலப் படைவீரர்களால் அவமதிக்கப்படுவதை பொது மக்களால் பொறுத்துக் கொள்ள முடியாதிருந்தது. தமது இராச்சியத்துள் ஓர் அராஜகத் தன்மை நிலவுவதை அவர்கள் உணர்ந்தனர்.

விசேடமாக தமது குறைகளையும் கவலைகளையும் மன்னரைக் கண்டு அவரிடமே முறையிட்டுத் தீர்வுகளைப் பெறுவதற்கு கண்டி மக்கள் பழக்கப் பட்டிருந்தனர். ஆயினும் 1815 இன் பின்னர் தமது கண்களுக்கு புலப்படாத பல்லாயிரம் கிலோமீட்டர்களுக்கு அப்பால் உள்ள ஒரு நாட்டில் வாழ்கின்ற அரசனின் ஆட்சியின் கீழ் வாழ நேர்ந்ததையும் எண்ணி அவர்கள் கவலையடைந்தனர்.

கண்டி இராசதானிக்கு ஓர் அரசனில்லாத குறையைப் பொது மக்கள் மாத்திரமல்ல பௌத்தபிக்குகளும் கூட உணர்ந்தனர். 1815 கண்டி உடன்படிக்கை கைச்சாத்தான பின்னர் தனது கிராமத்துக்கு சென்ற குங்குனாவே பிக்கு அவர்கள், தமது தலைமையை பின்தொடர்ந்து சென்ற எறும்புகளைப் பார்த்துப் பாடிய பின்வரும் கவிதை மூலம் தெரியவருவது யாதெனில் கண்டி இராசதானியின் சகல தரப்பினரும் தமது அரசனை இழந்தமையால் கவலையுற்றிருந்தமையாகும்.

ஐயோ எறும்புகளே!
உங்களுக்குங் கூட
ஓர் அரசனிருக்கிறான்
எங்களுக்கில்லை
எமது விதியோ இது?
மன்னனொருவன் எமக்கு
கிடைப்பானாயின்
பனியாரம் பாற்சோறு சாப்பிடுவோம்!
பெரஹர ஊர்வலம் போவோம்!
சாது நாதத்தை முழங்குவோம்!

## ஆட்சி உரிமையாளன் ஒருவன் வெளிப்பட்டமை

இந்நிலைமையில் கண்டி அரச அரியணைக்கு உரித்துடைய ஒருவன் ஊவா வெல்லஸ்ஸப் பகுதியில் தோன்றினான். அவன் துரைசாமி எனும் பெயரில் அழைக்கப்பட்டான். பௌத்த பிக்குகள் சிலரையும் கொஹு கும்புரே, ரட்டேராள, பூட்டாவே ராள முதலிய பிரதானிகளையும், வேடர்களையும், பொது மக்களையும் இணைத்துக் கொண்டு தனது உரிமையைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகளில் அவன் ஈடுபட்டான். அவனைக் கைது செய்வதற்காக ஆங்கிலேயப்படைகள் ஊவா வெல்லஸ்ஸப் பகுதிக்கு அனுப்பப்பட்டதுடன் போராட்டம் ஆரம்பமானது.

## கெப்பிட்டிபொல திசாவையின் தலைமை

எவ்வித முன்னேற்பாடுகளும் இல்லாத போதிலும் நாட்டின் பல பாகங்களிலும் ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சிகள் பரவலாக இடம்பெற்றன. தும்பரை, ஹேவாஹெட்ட, ஏழு கோறளை, ஹாரிஸ்பத்துவ, மாத்தளை, சபரகமுவவின் ஒரு பகுதி, நுவரகலாவிய முதலிய பகுதிகளிலும் கலகங்கள் நடைபெற்றன. ஆனால் கண்டிக்கு அண்மையில் அமைந்திருந்த உடுநுவர, யட்டிநுவர, நாலு கோறளை, சப்ரகமுவ முதலிய பகுதிகளில் இக்கிளர்ச்சிகள் இடம் பெறவில்லை. இதில் கெப்பிட்டிபொல திசாவையுடன் மடுகலே உடுகம்பர நிலமே, பிலிமத்தலாவை மகாநிலமே, கொல்லேங்கொட மொஹட்டல, கொடுகும்பர ரட்டராலே, பூட்டாவே ரட்டராலே, இகாகம பிக்கு போன்றவர்களும் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

ஆங்கிலேயராட்சியில் பணியாற்றிய கெப்பட்டிப்பொல திசாவை ஊவா வெல்லஸ்ஸ கிளர்ச்சியை அடக்குவதற்காக அனுப்பப்பட்டார். அக்கால கட்டத்தில் பலம்வாய்ந்த தேசியத்தலைவரான கெப்பட்டிபொல மூலம் கலகத்தை அடக்கலாம் என்ற ஆங்கிலேயரின் தந்திரம் பலிக்கவில்லை. அவர் தன்னுடன் வந்த ஆங்கிலப்படைகளையும் ஆயுதங்களையும் திருப்பி அனுப்பிவிட்டு கலகக்காரர்களுடன் சேர்ந்து கொண்டார். பின்னர் கதிர்காமத்தில் வைத்து துரைசாமியின் மகா அதிகாரம் பதவிக்கு முடிசூட்டப்பட்டார். ஊவா வெல்லஸ்ஸ பகுதியின் பிரதானிகளையும் பொதுமக்களையும் இணைத்துக் கொண்டு கெப்பட்டிபொல முதலாவது சுதந்திரக் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கினார்.

## முதலாவது சுதந்திரப் போராட்டம் தோல்வியடைதல்

ஆங்கிலேயருக்கு இப்போராட்டத்தை அடக்குவது சிரமமாகவே இருந்தது. அவர்களுக்கு இந்தியாவிலிருந்து, மேலதிகப்படைகளைத் தருவிக்கவும் நேர்ந்தது. கிளர்ச்சி இடம் பெற்ற ஊவா வெல்லஸ்ஸப் பகுதியில் பொது மக்களின் வீடுகளும் பயிர் நிலங்களும் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. கிளர்ச்சியை அடக்குவதற்கு ஆங்கிலேயர் பின்பற்றிய இவ்வழி முறை ''நிலத்தை பாழடையச் செய்யும் கொள்கை'' எனப்பட்டது. இதன்படி வீடுகள் எரிக்கப்பட்டு சாம்பலாக்கப்பட்டதுடன் தானியங்களும் விளைநிலங்களும் அழித்து நாசமாக்கப்பட்டன. இதனால் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்கள் கலக்கமடைந்ததுடன் மக்கள் கிராமங்களைக் கைவிட்டு காடுகளுக்குச் சென்றனர்.

ஆயினும் 1818 ஆம் ஆண்டு முதலாவது சுதந்திரப் போராட்டம் கிளர்ச்சியாளர்களுக்கு வெற்றியைத் தருவதாகவே அமைந்தது. அதற்குக் காரணம் கிளர்ச்சியாளர்கள் தலதா மாளிகையில் இருந்த புனித தந்ததாதுவைக் கைப்பற்றிக்கொண்டமையாகும். என்றாலும் பல காரணங்களாலும் இக்கிளர்ச்சி தோல்வியிலே முடிவடைந்தது.

## முதலாம் சுதந்திரப் போராட்டத்தின் தோல்விக்கான காரணிகள்

- ❖ இக்கிளர்ச்சியானது ஒழுங்கான முறையில் திட்டமிடப்பட்டதாக அமையவில்லை. எல்லாப் பிரதேசங்களிலும் தனித்தனியாக கிளர்ச்சி இடம் பெற்றுள்ளமையால் ஆங்கிலேயரால் அதனை இலகுவாக அடக்கக் கூடியதாக இருந்தது.
- ❖ கண்டிப் பிரதானிகள் இக்கிளர்ச்சியில் கலந்து கொண்டது தேசிய உணர்வுடன் அல்ல. அவர்கள் தமது வரப்பிரசாதங்களை இழந்தமையாலேயே போராட்டத்தில் ஈடுபட்டனர். ஆங்கிலேயரை எதிர்த்த இந்தச் சந்தர்ப்பத்திலாவது பிரதானிகள் ஒற்றுமைப்படாமல் சொந்தக் கோப தாபங்களுடனேயே செயற்பட்டனர்.
- ❖ விசேடமாக சத்கோறளை திசாவையான மொல்லிகொட நிலமே இக்கிளர்ச்சியின் போது ஆங்கிலேயருக்கு சார்பாக நடந்து கொண்டார். எனவே ஆங்கிலேயருக்கு கொழும்புக்கும் கண்டிக்கும் இடையிலான தொடர்பை ஏற்படுத்துவதில் எவ்வித சிக்கலும் இருக்கவில்லை. காரணம்; கொழும்பு - கண்டி பிரதான வீதி மொல்லிகொடவின் கட்டுப்பாட்டிலிருந்த நாலு கோறளைப் பகுதியை ஊடறுத்தே சென்றது. எனவே ஆங்கிலேயருக்கு கிளர்ச்சியை அடக்குவது இலகுவாக இருந்தது.
- ❖ இக்கிளர்ச்சியை அடக்குவதற்காக ஆங்கிலேயர் பின்பற்றிய விளை நிலங்களை வீணாக்கும் செயற்பாடும் முதலாம் சுதந்திரப் போராட்டத்தை முடங்கச் செய்தது. ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்று, கிராமங்களையும் பயிர்நிலங்களையும் அழித்தொழித்த ஆங்கிலேயரின்

கொடூரச்செயல் மக்களைப் பெரிதும் பாதித்தது. எனவே சில கிளர்ச்சித் தலைவர்கள் தாமாகவே சரணடைந்ததுடன் பொது மக்கள் மலைப்பாங்கான பகுதிகளுக்குத் தப்பியோடினர்.

ஆங்கிலேயராட்சிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இந்த முதல் கிளர்ச்சியின் முடிவில் கெப்பிட்டிப்பொல, மடுகல்ல, கிவுலேகெதர மொஹட்டால, பூட்டாவே ரட்டேரால முதலிய வீரத் தலைவர்கள் ஆங்கிலேயரால் கொல்லப்பட்டனர் மேலும் பல தலைவர்களின் சொத்துக்கள் அரச உடைமையாக்கப்பட்டன.

1815இல் ஆங்கிலேயருக்கும் கண்டியப் பிரதானிகளுக்கும் இடையில் கைெயழுத்திடப்பட்ட கண்டி ஒப்பந்தத்தை 1818இல் ஆங்கிலேயர் மாற்றியமைத்தனர். அதன்படி கரையோரத்தில் நடைமுறைப் படுத்திய நிர்வாக, நீதிமன்ற முறைகளை கண்டிப்பிரதேசத்திலும் அறிமுகப்படுத்தியதுடன் அதற்காக 1815இல் ஒப்பந்தத்தையும் அவர்கள் பயன்படுத்திக்கொண்டனர்.

ஆங்கில கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியினால் 1796 இல் கரையோரங்கள் கைப்பற்றப்பட்டதுடன் ஆரம்பமான பிரித்தானியர் ஆட்சி இலங்கையில் 1818 கிளர்ச்சியின் பின்னர் முழுமை அடைந்தது.

செயற்பாடு

1. 1818 சுதந்திரக் கிளர்ச்சியானது தோல்வியில் முடிவடைந்தமைக்கான காரணிகளை அட்டவணைப்படுத்துக.
2. 1815 கண்டி ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் பற்றி பாடசாலை சஞ்சிகை ஒன்றுக்கு கட்டுரை வரைக
3. 1818 கிளர்ச்சியில் தொடர்பு கொண்ட வீரதீர தலைவர்கள் பற்றி கைநூல் ஒன்றைத் தயாரிக்க.

## 1848ஆம் ஆண்டுக்கிளர்ச்சி

ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிராக இலங்கையர்கள் கிளர்ச்சி செய்த இரண்டு சந்தர்ப்பங்கள் பற்றி முன்னர் கலந்துரையாடினோம். அவற்றுள் இரண்டாவது கிளர்ச்சியான 1848இல் நடைபெற்ற போராட்டம் பற்றிப் பார்ப்போம். 1818 இல் நடைபெற்ற முதலாவது கிளர்ச்சிக்கு கண்டி அரச பிரதானிகளே தலைமை தாங்கினர். 1848 கிளர்ச்சியானது தமது அன்றாட வாழ்க்கையை நடாத்துவதற்கு முடியாத நிலையிலிருந்த கிராமிய விவசாயிகளின் குரலாகவே ஒலித்தது. இக்கிளர்ச்சியை விவசாயிகளின் கிளர்ச்சி எனவும் விவசாயத்தின் ஒளி எனவும் வர்ணிக்கின்றனர்.

1848 கிளர்ச்சிக்கான காரணங்கள் இரண்டாகும். அவையாவன:,

❖ கோல்புறூக் - கமரன் சீர்திருத்தங்களின் விளைவுகள்.

❖ டொரிங்டன் ஆளுநரினால் விதிக்கப்பட்ட புதிய வரிகள்.

.

கோல்புறூக் - கமரன் சீர்திருத்தம் எவ்வாறு 1848 கிளர்ச்சிக்கு வித்திட்டது எனப் பார்ப்போம்.

1 கோல்புறுக் திட்டத்தில் சிபாரிசு செய்யப்பட்ட பெருந்தோட்டத்துறைக்காக மலையக சிங்கள மக்களின் காணிகள் ஆங்கிலேய தோட்ட உரிமையாளர்களால் ஆக்கிரமிக்கப்பட்டன. மேலும் கோப்பிச் செய்கைக்காக காடுகள் அழிக்கப்பட்டு நிலம் பண்படுத்தப்பட்ட போது மண்ணரிப்பு, வெள்ளப்பெருக்கு முதலிய காரணிகளால் உள்நாட்டு விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டன. கிராம மக்களின் விறகுக்குத் தேவையான மரந்தடிகளைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாமல் போனதுடன் அவர்களின் கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலமும் இல்லாமல் போனது. இத்திட்டத்தின் மூலமாக 1840இல் கொண்டு வரப்பட்ட தரிசு நிலச்சட்டத்தின் மூலம் மலையக மக்களின் காணிகள் அரசுடைமையாக்கப்பட்டன. மிகக் குறைந்த விலைகளில் வெளிநாட்டவருக்கு பெருந்தோட்ட பயிர்செய்கைக்காக விற்கப்பட்டதால் சிங்கள விவசாயிகளின் வாழ்வாதாரப் பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்டது. அவர்கள் நிலங்களையும் இழந்தனர். பெருந்தோட்டங்களுக்கு மத்தியில் அமைந்த சிறிய விவசாய நிலங்கள் ஆங்கிலேயர்களால் பலவந்தமாகப் பெற்றுக் கொள்ளப்பட்டது அல்லது விலை கொடுத்து வாங்கப்பட்டது.

2 பண்டைய காலந்தொட்டே இலங்கையின் விவசாயத்துறைக்கு அரச ஆதரவு கிடைத்தது. அது புறக்கணிக்கப்பட்ட ஆங்கிலேய ஆட்சியில் 1833 கோல்புறூக் சீர்திருத்தத்திலும் கிராமிய விவசாயத்திற்குப் பதிலாகப் பெருந்தோட்ட விவசாயத்துக்கே அக்கறைக் காட்டப்பட்டது.

3 வழமையாக விவசாயிகள் மத்தியில் எழுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்தல், கிராமியக் குளங்கள், வாய்கால்களைப் புனரமைத்தல் முதலான செயற்பாடுகளை ‘‘கம்சபா’’ எனப்பட்ட கிராம சபைகளே மேற்கொண்டு வந்தன. இக்கிராம சபைகளின் சிறப்புப்பற்றி கோல்புறூக் கருத்து வெளியிட்ட போதிலும் அதன் நிலைப்பாட்டுக்கு எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. எனவே அதிகாரமில்லாத கிராமசபை செயலிழந்து காணப்பட்டது.

4 கமரனின் நீதித்துறை சீர்திருத்தங்களின் காரணமாக உருவான நீதிமன்ற முறையினால் அதுவரை கிராம சபைகளுக்கிருந்த அதிகாரங்களும் இல்லாமல் போயின. எனவே சிறு சிறு வழக்குகளுக்கும் தொலைவிலுள்ள நகர நீதிமன்றங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை கிராம விவசாயிகளுக்கு ஏற்பட்டது. இதனால் அவர்களுக்கு வக்கீல் செலவு, முத்திரைச் செலவு, பயணச் செலவு என்று செய்ய வேண்டியிருந்ததுடன் வெளிநாட்டுச் சட்டமோ ஆங்கில மொழியோ புரியாத கிராம மக்கள் தமது வேலைகளையும் கைவிட்டு அலைந்த போதும் வழக்குகளில் ஆங்கில நீதிபதிகள் வழங்கிய தீர்ப்புகளும் அவர்களுக்கு நியாயமானதாக அமையவில்லை.

5 இராஜ காரிய முறையை கோல்புறூக் சீர்திருத்தம் நீக்கியிருந்தது. எனவே அதுவரை காலமும் இராஜகாரிய அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வந்த உள்நாட்டு நீர்ப்பாசனக் கால்வாய், குளங்கள் புனரமைப்புப் பணிகளும் தடைப்பட்டன.

எனவே கோல்புறூக் - கமரனின் சீர்திருத்தங்களினால் பாதிப்படைந்த கிராம விவசாயிகள் ஆங்கில ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி ஒன்றுக்குத் தூண்டப்பட்டார்கள். இக்கால கட்டத்தில் ஆங்கிலேய ஆட்சியாளர்களால் 1840இல் விதிக்கப்பட்ட தரிசு நிலச்சட்டம் எரிகின்ற நெருப்பில் எண்ணெய் வார்ப்பதாக அமைந்தது. அச்சட்டத்தினால் எழுத்து மூலம் உறுதிப்படுத்தப்பட முடியாத கிராம மக்களின் நிலங்கள் யாவும் அரசினால் சுவீகரிக்கப்பட்டன.

கிராம மக்களின் வழக்கப்படி அவர்களது காணிகளுக்கு எழுத்து மூல ஆவணங்கள் காணப்படவில்லை. இதனால் விவாசாயிகள் தமது நிலங்களை இழந்து நின்றனர். இது பெருந்தோட்டத் துறைக்கு நிலங்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஆங்கிலேயரின் தந்திரமான செயற்பாடாகவே அமைந்தது.

செயற்பாடு

இலங்கையின் நிர்வாகத்துக்கு உறுதுணை புரிந்த நிர்வாகக் கட்டமைப்பான "கம்சபா" எனும் கிராமசபை முறையானது கோல்புறூக் கமரன் சீர்திருத்தங்களின் படி அதிகாரம் இல்லாமலாக்கப்பட்டமை பற்றி ஆராய்க.

## ஆளுநர் டொரிங்டனின் புதிய வரிக்கொள்கை

அரசாங்கத்தின் வருமானத்தை அதகரிப்பதற்காக புதிதாக வரிகள் விதிக்கப்பட்டன. அந்த வகையில் தோணிவரி, வண்டி வரி, துப்பாக்கி வரி, நாய் வரி முதலிய வரிகளைச் செலுத்த வேண்டி ஏற்பட்டது. அத்துடன் முத்திரை வரிகளும் அதிகரிக்கப்பட்டன.

ஒவ்வொருவரும் ஆண்டுக்கு 3 சிலிங் வரி செலுத்த வேண்டி ஏற்பட்டது. அல்லது ஆண்டில் ஆறு நாட்கள் பாதையமைத்தல் முதலிய பாரிய பணிகளில்

சம்பளமில்லாமல் வேலை செய்ய வேண்டியேற்பட்டது. உடல்வரி எனப்பட்ட இந்தமுறையால் இராஜகாரிய முறையை மீண்டும் அமுல்படுத்துவதற்கு ஆங்கிலேயர் முயற்சிக்கின்றனரா? என்ற கேள்வியை எழுப்பியது. புதிய சூழலில் இராஜகாரிய முறையில் மீண்டும் ஈடுபடுவதற்கு சுதேச மக்கள் விரும்பவில்லை.

இக்காலகட்டத்தில் ''நீலப் புத்தகம்'' எனும் பெயரில் ஆங்கில அரசு சனத்தொகை பற்றி புள்ளி விபரமொன்றைத் திரட்டியது. இதுவும் புதிய வரி விதிப்புக்கான முன்னேற்பாடென மக்கள் சந்தேகித்தனர். எனவே தமது நிலைமையை அரசாங்கத்துக்கு விளக்கி உதவி பெறுவதற்கு மக்கள் தீர்மானித்தனர்.

**கிளர்ச்சியின் ஆரம்பமும் பரவலும்**

1847ஆம் ஆண்டு ஜுலை மாதம் 4000 பேரைக் கொண்ட குழுவொன்று தமது முறைப்பாட்டைக் கையளிப்பதற்காக கச்சேரிக்குச் சென்றது. இச்சந்தர்ப்பத்தில் திறமையற்ற நிர்வாகியாகக் காணப்பட்ட ஆளுநர் டொரிங்டன் இராணுவத்தினருக்கு கட்டளையிட்டு அம்மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்வித்தார்.

எனவே1848 ஆம் ஆண்டு விவசாயிகள் ஆங்கில ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார்கள். இக்கிளர்ச்சிக்கு கொங்காலேகொட பண்டா, ஹங்குராங்கொத்த டிக்கிரி ராலே, வீரபுரன்அப்பு, குடாபொல பிக்கு முதலியோர் தலைமை தாங்கினர்.

**போராட்டத்தை அடக்குதல்**

இம்மக்கள் போராட்டத்தை இராணுவத்தின் கடுமையான நடவடிக்கைகளால் ஆளுநர் டொறிங்டன் முடிவுக்குக் கொண்டு வந்தார். முடிவில் குடாபொலபிக்கு துப்பாக்கிச் சூட்டில் கொலை செய்யப்பட்டார். வீரபுரன்அப்புவுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. விசாரணைக்கு ஆளான கொங்காலேகொட பண்டாவை சாட்டையடித் தண்டனையுடன் நாடு கடத்துமாறு தீர்ப்பு வழங்கப்பட்டது. இவர்கள் மூவரும் இலங்கையின் தேசியவீரர் பட்டியலில் இடம்பெறுகின்றனர். அண்மைக் காலத்தில் ''வீரபுரன்அப்பு'' எனும் பெயரில் அவ்வீரர்களின் கதை சிங்களத் திரைப்படமாக வெளிவந்தது.

இக்கிளர்ச்சியின் போது ஆளுநர் டொரிங்டனின் நடவடிக்கைகளினால் அதிருப்தி உற்ற பிரித்தானிய அரசாங்கம் அவ்வாளுநரைத் தனது நாட்டிற்குத் திருப்பியழைத்ததுடன் அவர் விதித்த வரிகளையும் நீக்கியது. மேலும் கிராமிய விவசாயிகள் பற்றி ஆங்கில ஆட்சியாளர் அக்கறை செலுத்தாத தவறையும் உணர்ந்தது.

**செயற்பாடு :**

1 1848 சுதந்திரப் போராட்டத்துக்கு வழிவகுத்த காரணங்களை விளக்கி பத்திரிக்கைக்கு கடிதம் வரைக?

2 ஆங்கிலேய ஆட்சியின்போது சுதேச மக்கள் மேற்கொண்ட 1818 ஆம் ஆண்டுக் கிளர்ச்சியையும் 1848 ஆம் ஆண்டு கிளர்ச்சியையும் ஒப்பீடு செய்க.

## பிரித்தானியர் ஆட்சியில் அரசியல் யாப்பு வளர்ச்சி

இலங்கையில் அரசியல் யாப்பு என்பது படிப்படியாக வளர்ச்சியடைந்த தொன்றாகும். வரலாற்றுக் காலம் முதல் கண்டி இராசாதனியின் முடிவு வரை இந்நாட்டில் அரசராட்சி முறையே நிலவியது.

ஆனால் எமது நாட்டில் அரசியல்யாப்பு எனும் விரிவான விடயம் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே அறிமுகப்படுத்தப்பட்டது. யாப்பு முறை மாற்றம் என்பது நாட்டின் நிர்வாகத்தில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களாகும்.

அதன்படி நாம் இலங்கையின் அரசியல் யாப்புத்திட்ட வளர்ச்சியின் வரலாற்றைப் பார்ப்போம்.

## 1833இற்கு முன்னர் ஆங்கிலேயரின் ஆட்சிமுறை.

1796இல் இலங்கையின் கரையோரங்களைக் கைப்பற்றிக் கொண்ட பிரித்தானியாவின் ஆங்கில கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியே கரையோர நிர்வாகத்தையும் மேற்கொண்டது. கரையோரச் சிங்களவர் 1798இல் ஆங்கிலேயருக்கு எதிராக மேற்கொண்ட கிளர்ச்சியின் பின்னர் 1798-1802 காலப்பகுதியில் இலங்கையின் கரையோரத்தில் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியும் முடியின் பிரதிநிதியான ஆளுநரும் இணைந்து நடாத்திய ‘‘இரட்டை ஆட்சிமுறை’’ நிலவியது. 1802இல் இலங்கை பிரித்தானியாவின் குடியேற்றமாக்கப்பட்டதுடன் இரட்டை ஆட்சி முறை இல்லாமலாகி கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் அதிகாரம் நீக்கப்பட்டது.

பிரித்தானிய முடிக்குரிய குடியேற்றமான இலங்கையின் கரையோரத்தில் செயற்படுத்தப்பட்ட அரசியல் யாப்பு பிரித்தானிய குடியேற்ற நாடுகளில் செயற்படுத்திய யாப்பை ஒத்திருந்தது. அதன்படி ஆளுநருக்கு பிரித்தானிய முடியின் பிரதிநிதி என்ற வகையில் எல்லையற்ற அதிகாரங்கள் காணப்பட்டன. ஆளுநரின் கீழ் அவரால் தெரிவு செய்யப்பட்ட சிவில் சேவை அதிகாரிகளைக் கொண்ட ஓர் ஆலோசனைச் சபை காணப்பட்டது இச்சபையானது ஒருபோதும் ஆளுநரின் முடிவுகளை எதிர்க்கவில்லை. ஆளுநரும் அவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு செயற்பட வேண்டும் என்ற கட்டாயமும் இருக்கவில்லை. எனவே 1833 வரை ஓர் சர்வதிகார ஆட்சி முறையே இலங்கையில் நிலவியது.

1815இல் மலையகத்தையும் தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்த பிரித்தானியர் அதன் ஆட்சி மரபுகளின்படி தனியலகாக அதனை ஆட்சி செய்வதாக ஒப்பந்தத்தில் கூறியிருந்தனர்.

1818ஆம் ஆண்டு ஆங்கிலேயருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கிளர்ச்சியானது கண்டிச் சிங்களவர் ஆங்கில ஆட்சி முறையை அங்கீகரிக்கவில்லை என்பதையே சுட்டிக் காட்டியது. ஆனாலும் அவர்கள் ஆட்சி முறையில் பாரிய மாற்றங்கள் எதனையும் மேற்கொள்ளவில்லை.

## கோல்புறூக் - கமரன் சீர்திருத்தம் - 1833.

பிரித்தானியர் குடியேற்றங்களை வைத்திருந்தது இலாப நோக்கிலாகும். என்றாலும் இலங்கையிலிருந்து அவர்களுக்குக் கிடைத்த வருமானத்தைவிட இலங்கைக்கான நிர்வாக மற்றும், பாதுகாப்புச் செலவுகள் அதிகமாகக் காணப்பட்டன. அத்துடன் இலங்கையின் நிர்வாக முறையிலும் நீதித்துறையிலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்து 1798 முதல் அவர்களிடம் காணப்பட்டது. மேலும் அக்காலகட்டத்தில் பிரித்தானியாவில் பரவிய தாராள வாத ஜனநாயக (லிபரல் வாதம்) கருத்துக்களும் குடியேற்ற நாடுகளின் ஆட்சிமுறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு வழிகோலின.

எனவே இலங்கையின் நிர்வாகத்துறை, நீதித்துறை என்பன பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக பிரித்தானியாவிலிருந்து ஓர் ஆணைக்குழு 1829 ஆம் ஆண்டு அனுப்பப்பட்டது. இவ்வாணைக் குழுவுக்கு வில்லியம் கோல்புறூக் தலைமை தாங்கியதுடன் நீதித்துறை தொடர்பான குழுவுக்கு சார்ள்ஸ் கமரன் தலைமை தாங்கினார்.

எமது நாட்டின் முதலாவது அரசியல் யாப்பாக 1833இல் அறிமுகப்படுத்தப்பட்ட கோல்புறூக் - கமரன் சீர்திருத்தம் விளங்குகின்றது. இந்த யாப்பில் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டவாக்கக் கழகத்தில் இலங்கையர்களுக்கும் இடம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இந்த யாப்புச் சீர்திருத்தம் மூலம் இலங்கையர்களுக்குக் குறிப்பிடத்தக்களவு நிர்வாக அதிகாரங்கள் கிடைக்காத போதிலும் சுதந்திரத்திற்கான பயணத்தின் ஆரம்பப் படியாக அது அமைந்தது.

1833 சட்டவாக்கக் கழகம் (உறுப்பினர் 15)

- உத்தியோக சார்புள்ளோர். (09)
- உத்தியோக சார்பற்றோர் (06)
  - ஐரோப்பியர் (03)
  - பறங்கியர் (01)
  - சிங்களவர் (01)
  - தமிழர் (01)

இந்த யாப்பின்படி இலங்கையருக்கு ஆட்சி அதிகாரத்தில் செல்வாக்குச் செலுத்த முடியாமல் போனாலும் அவர்களது கோரிக்கைகளுக்கு ஆங்கில நிர்வாகம் செவிமடுக்க வேண்டி ஏற்பட்டது.

மேலும் இந்த யாப்பு பிரதிநிதித்துவ முறையை ஆரம்பித்து வைத்ததும் ஒரு சிறப்பம்சமாகும். சட்டவாக்கக் கழகத்தில் உத்தியோகச் சார்புள்ளவர்கள் ஆளுனருக்கு பக்கச் சார்பாகவே நடந்து கொண்டனர். இவர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்பட்டமையால் உத்தியோகச் சார்பற்றவர்கள் செல்வாக்கற்றவர்களாகவே காணப்பட்டனர். எனவே தமது குரலுக்குச் செவிமடுக்கும் நிலையை ஏற்படுத்த வேண்டுமாயின் உத்தியோகச் சார்பற்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென்பதை அவர்கள் உணர்ந்து கொண்டனர்.

எனவே உத்தியோகச் சார்பற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு அவர்கள் தொடர்ந்தும் கோரிக்கை விடுத்து கோசம் எழுப்பினர். அதன் பயனாக 1889 ஆம் ஆண்டு சட்டவாக்கக் கழகத்தில் உத்தியோக சார்பற்ற அங்கத்தவர் தொகை எட்டாக அதிகரிக்கப்பட்டது. இதில் ஒரு முஸ்லீமும், கண்டிச்சிங்களவரும் அங்கத்தவர்களாகச் சேர்க்கப்பட்டனர்.

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் அரசியல் போராட்டத்தில் ஈடுபாடு கொண்ட மத்தியதர வகுப்பினரின் இயல்பு மாற்றமடைந்தது. அதுவரை காலமும் இலங்கையில் பெருந்தோட்டத் துறையில் ஈடுபட்ட ஐரோப்பியரே யாப்பு முறையில் சீர்திருத்தங்களைக் கோரி வந்தனர். இக்கால கட்டத்தில் ஆங்கிலக் கல்வி கற்ற இலங்கையின் மத்திய வகுப்பினர் யாப்பு முறையில் சீர்திருத்தக் கோரிக்கைகளை முன்வைத்துப் போராடினர். எனவே இலங்கையர் தமது தாய் நாட்டுக்காக விடுக்கும் கோரிக்கைகளை முற்றுமுழுதாக நிராகரிப்பதற்கு பிரித்தானிய ஆட்சியாளர்களால் முடியவில்லை.

## குறூ மக்கலம் யாப்பு முறை சீர்திருத்தம் (1910 - 1912)

ஆட்சி நிர்வாகத்தில் பங்குபற்றுவதற்குத் தமக்கு அதிக சந்தர்ப்பம் வழங்குமாறும் பிரதிநிதிகளை வாக்குரிமை மூலம் தெரிவு செய்யுமாறும் கல்வி கற்ற, மத்தியதர வகுப்பைச் சேர்ந்த இலங்கையர் தொடர்ந்தும் கோரிக்கை விடுத்து வந்தனர். இவர்களுள் ஜேம்ஸ் பீரிஸ், சேர். பொன்னம்பலம் இராமநாதன், ஈ. ஜே. சமரவிக்கிரம, எப். ஜே. டி. மெல் ஆகியோர் முன்னணியில் இருந்தனர். இவர்கள் ஆங்கில அரசுக்கு முன்வைத்த மனுவில் காணப்பட்ட சில கோரிக்கைகளாவன.

01. சட்டவாக்கக் கழக உறுப்பினர்கள் இனரீதியாக அல்லாமல் பிரதேசவாரியாகத் தெரிவு செய்யப்பட வேண்டும்.

02. அப்பிரதிநிதிகள் ஆளுநரால் பெயர் குறிக்கப்படாது வரையறுக்கப்பட்ட வாக்குரிமை மூலம் தெரிவு செய்யப்பட வேண்டும்.

03. சட்டவாக்கக் கழகத்தின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டும்

04. சட்ட நிர்வாக சபையிலும் இலங்கையருக்கு அங்கத்துவம் வழங்கப்படுதல் வேண்டும்

இக்கோரிக்கைகள் யாவும் மக்கலம் ஆளுநரால் நிராகரிக்கப்பட்டன. ஆயினும் இலங்கையில் எழுச்சியடைந்த ஆங்கிலம் கற்ற மத்திய வகுப்பினரைப் புறக்கணிக்க முடியாது என்பதைப் புரிந்து கொண்ட பிரித்தானிய குடியேற்ற நாட்டுக காரியதரிசி குறூ அவர்கள், யாப்புத்திட்டவாதிகளின் வேண்டுகோளையும் ஆளுநரின் கருத்துக்களையும் கவனத்தில் எடுத்து 1910 ஆம் ஆண்டு பிரித்தானியப் பாராளுமன்றத்தில் யாப்புச் சீர்திருத்த அனுமதியைப் பெற்றுக் கொண்டார். 1912 இல் இந்த யாப்புச் சீர்திருத்தம் அமுல்படுத்தப்பட்டது.



ஆளுநர் மக்கலம்
படம் 1.6

## குறூ - மக்கலம் யாப்புச்சீர்திருத்தம் 1910

சட்டவாக்கக் கழகம் (21 உறுப்பினர்)

- உத்தியோக சார்பு உறுப்பினர் (11)
- உத்தியோக சார்பற்ற உறுப்பினர் (10)
  - தேர்தல் மூலம் (04)
    - கல்வி கற்ற இலங்கையர் (01)
    - ஐரோப்பியர் (02)
    - பறங்கியர் (01)
  - (ஆளுநர்) நியமனம் (06)
    - கரைநாட்டுச் சிங்களவர் (02)
    - தமிழர் (02)
    - கண்டிச் சிங்களவர் (01)
    - முஸ்லிம் (01)

## இந்த யாப்புச் சீர்திருத்தத்தின் முக்கிய அம்சங்களாவன :

- ❖ அரசியல் யாப்பு வரலாற்றில் இலங்கையருக்கு முதன் முதலில் வரையறுக்கப்பட்ட வாக்குரிமை வழங்கப்பட்டது.
- ❖ இனவாரிப் பிரதிநிதித்துவம் தொடர்ந்தும் நீடித்தது.
- ❖ கல்வி கற்ற இலங்கையர் ஒருவருக்கு வழங்கப்பட்ட பிரதிநிதித்துவம் எதிர்காலத்தில் இலங்கையரின் பிரதிநிதித்துவம் விரிவாக்கப்படும் என்பதை உணர்த்தியது.
- ❖ தொடர்ந்தும் சட்டவாக்கக் கழகத்தில் உத்தியோகச்சார்பு உறுப்பினர் தொகையே அதிகரித்துக் காணப்பட்டது.
- ❖ சட்டவாக்கக் கழகத்தின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டன.
- ❖ சட்ட நிர்வாக சபை தொடர்ந்தும் உத்தியோகச்சார்பு உறுப்பினர்களை மட்டுமே கொண்டிருந்தது.

இந்த யாப்புச் சீர்திருத்தம் மூலம் இலங்கையர்களுக்குக் குறிப்பிடத்தக்களவு நிர்வாக அதிகாரங்கள் கிடைக்காத போதிலும் சுதந்திரத்திற்கான பயணத்தில் முதல் அடியை எடுத்து வைக்கக் கூடியதாக இருந்தது. வரையறுக்கப்பட்ட வாக்குரிமை மூலம் ஓர் இலங்கைப் பிரதிநிதி சட்டவாக்கக் கழகத்தில் இடம் பெற்றமை விசேட அம்சமாகும்.


சேர். பொன். இராமநாதன்
படம் 1.7

மேலும் இலங்கை மக்களுக்குச் சட்டவாக்கக் கழகத்தில் உண்மையான பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கும் இச்சீர்திருத்தம் வழிகோலியது.

அத்துடன் இச்சந்தர்ப்பம் வீணடிக்கப்படாது உரிய முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. கல்வி கற்ற இலங்கையராக சட்டவாக்கக் கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் யாப்புச் சீர்திருத்தம் கோருவதில் முன்னோடியாகத் தொடர்ந்தும் செயற்பட்டார். இவர் சட்டவாக்கக் கழகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் சுதந்திரம் நோக்கிய பயணத்தை வேகப்படுத்தினார்.

## மனிங் யாப்புச் சீர்திருத்தம் - 1920

1910 ஆம் ஆண்டு யாப்புச் சீர்திருத்தம் மூலம் கிடைத்த பெயரளவு அதிகாரம், பொறுப்புக்கள் பற்றி இலங்கையர் திருப்தியடையவில்லை. எனவே 1920 ஆம் ஆண்டு ஆளுநர் மனிங்கின் காலத்தில் யாப்பு சீர்திருத்தப்பட்டது.

இதன்படி சட்டவாக்கக் கழக உறுப்பினர் தொகை 37 ஆக அதிகரித்தது. அதில் 14 பேர் உத்தியோக சார்புடையோர் ஆகவும் 23 பேர் உத்தியோக சார்பற்றோராகவும் இருந்தனர். இவர்களுடன் 16 பேர் வரையறுக்கப்பட்ட வாக்குரிமை மூலம் இனரீதியாகவும் தேர்தல் தொகுதி ரீதியாகவும் தெரிவு செய்யப்பட்டனர். ஏனைய ஏழு பேரும் ஆளுநரால் நியமிக்கப்பட்டனர். இம்முறை வாக்குரிமை மூலமான பிரதிநிதித்துவம் விரிவாக்கப்பட்ட போதிலும் சனத்தொகையில் சிறு தொகையினருக்கே வாக்குரிமை வழங்கப்பட்டது.

## 1920 மனிங் யாப்புச் சீர்திருத்தம்

சட்டவாக்கக் கழகம் (37 உறுப்பினர்)

- உத்தியோகச்சார்பு உறுப்பினர் (14)
  - பதவிப் பிரகாரம் (05)
  - ஆளுநர்நியமனம் (09)
- உத்தியோகச் சார்பற்ற உறுப்பினர் (23)
  - நியமனம் (07)
    - கண்டிச் சிங்களவர் (02)
    - முஸ்லிம் (01)
    - இந்தியத் தமிழர் (01)
    - சிறப்பு (03)
  - தேர்தல் மூலம் (16)
    - இனரீதியாகவும் தொழில் ரீதியாகவும் (05)
      - ஐரோப்பியர் (02)
      - பறங்கியர் (01)
      - வர்த்தக சபை (01)
      - கரை நாட்டு உற்பத்தியாளர் சங்கம் (01)
    - மாகாண தேர்தல் தொகுதி வாரியாக (11)
      - கொழும்பு (01)
      - மேல்மாகாணம் (02)
      - ஏனைய 08 மாகாணங்களுக்கும் ஒருவர் வீதம் (08)

### மனிங் யாப்புச் சீர்திருத்தத்தின் முக்கிய பண்புகள்

- ❖ சட்டவாக்கக் கழக வரலாற்றில் முதன்முறையாக உத்தியோகச் சார்பற்ற அங்கத்தவர் தொகை அதிகரிக்கப்பட்டது.˙.
- ❖ உத்தியோகச்சார்பு அங்கத்தவர் 14 பேருடன் ஆளுநரால் நியமனம் பெறும் உறுப்பினர் 7 பேரும் ஆளுநருக்கு பக்கச்சார்பாக இருக்க முடியுமென்பதால் ஆளுநரின் அதிகாரம் குறையவில்லை.
- ❖ மாகாண ரீதியான தேர்தல் தொகுதி முறையை அறிமுகப்படுத்தல்.
- ❖ 1910 யாப்புச் சீர்திருத்தத்தை விட 1920இல் வாக்குரிமை விரிவாக்கப்பட்டது. கல்வி கற்ற சொத்துக்களையுடைய ஆண்களுக்கு மட்டும் அது 4 வீதமாக வரையறுக்கப்பட்டிருந்தது.
- ❖ இனரீதியான பிரதிநிதித்ததுவம் தொடர்ந்தும் நடைமுறையில் இருந்தது.
- ❖ பணம், கல்வி, சொத்துக்களிருந்தும் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்படவில்லை.
- ❖ சட்டவாக்கக் கழகத்தின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டன.
- ❖ அரச நிர்வாக நடவடிக்கைகள் யாவும் தொடர்ந்தும் ஆளுநரிடமே காணப்பட்டன.

யாப்புச் சீர்திருத்தம் கோருவோர் இந்த யாப்புச் சீர்திருத்தத்தினாலும் திருப்தியடையவில்லை. இக்காலகட்டத்தில் இலங்கைத் தேசிய காங்கிரஸ் சார்பில் திரு. ஜேம்ஸ் பீரிஸ் அவர்கள் ஆளுநர் மனிங்கிடம் தமது யாப்புச் சீர்திருத்த ஆலோசனைகளைச் சமர்ப்பித்தார்.

செயற்பாடு

1920 யாப்புச் சீர்திருத்தத் திட்டடத்தை அவதானித்து அதன் முக்கியமான அம்சங்களை வரிசைப்படுத்துக.

## 1924 மனிங் - டிவன்சயர் யாப்புச்சீர்திருத்தம்

- சட்டவாக்கக் கழகம் (அங்கத்தவர் 49)
  - உத்தியோகச் சார்பு உறுப்பினர் (12)
  - உத்தியோகச் சார்பற்ற உறுப்பினர் (37)
    - தேர்தல் மூலம் (29)
      - தேர்தல் தொகுதி வாரியாக (23)
      - இனரீதியாக (06)
        - ஐரோப்பியர் (03)
        - பறங்கியர் (02)
        - மேல்மாகாண இலங்கைத் தமிழர் (01)
    - நியமனம் (08)

## இந்த யாப்பின் விசேட அம்சங்கள்

- சட்டவாக்கக் கழக உறுப்பினர்களுள் 50% க்கு மேற்பட்டவர்கள் தேர்தல் மூலம் மக்களால் தெரிவு செய்யப்பட்டனர். இது இலங்கையின் அரசியல் யாப்புத்திட்ட வளர்ச்சியைக் காட்டுகிறது.
- அரசாங்க நிர்வாகக் கடமைகள் தொடர்ந்தும் ஆளுநரின் கைகளிலே இருந்தது.
- சட்டவாக்கக் கழக உறுப்பினர்களுள் பெரும்பான்மையானோர் மக்கள் பிரதிநிதிகளாக இருந்த போதிலும் நிர்வாக நடவடிக்கைகள் ஆளுநரிடமே காணப்பட்டன. எனவே அதிகாரமும் பொறுப்பும் வெவ்வேறாகப் பிரிந்து காணப்பட்டமை யாப்பின் குறைபாடாகும்.
- இனவாரிப் பிரதிநிதித்துவம் தொடர்ந்தும் இடம் பெற்றமையால் எதிர்காலத்தில் சிங்களதமிழ் இனபேதங்கள் ஏற்படவும் அது வழிவகுத்தது.
- சட்ட நிர்வாகக் கழகத்துக்கு உத்தியோகச் சார்பற்ற உறுப்பினர் மூவர் நியமிக்கப்பட்டனர்.

செயற்பாடு
1920மனிங் யாப்புச் சீர்திருத்தம், 1924 மனிங்-டிவன்சயர் யாப்புச் சீர்திருத்தம் இரண்டிலும் காணப்படும் இனவாரிப் பிரதிநிதித்துவத்தின் விஷேட பண்புகளை வரிசைப்படுத்துக.

## டொனமூர் யாப்பு - 1931

இலங்கையில் ஒரு யாப்புச் சீர்திருத்தத்தை மேற்கொள்ளும் முகமாக 1927 ஆம் ஆண்டு டொனமூர் பிரபுவின் தலைமையில் ஓர் ஆணைக்குழு இலங்கைக்கு வந்தது.

இலங்கையின் சுதந்திரப் பாதையில் 1931 இல் அறிமுகப்படுத்தப்பட்ட டொனமூர் யாப்பு ஒரு மைல்கல்லாகும். இதன் பிரதான அம்சங்களாவன :

- சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டமை
- அரசுக்கழகம் அறிமுகப்படுத்தப்பட்டமை.
- நிர்வாகக்குழு முறை ஆரம்பிக்கப்பட்டமை.
- ஆளுநரின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டமை.
- பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் விரிவாக்கப்பட்டமை.
- நிறைவேற்று சபை முறைஆரம்பிக்கப்பட்டதுடன் அமைச்சரவையும் விரிவாக்கப்பட்டமை
- இனவாரிப்பிரதிநிதித்துவம் நீக்கப்பட்டமை.

## சர்வசன வாக்குரிமை.

1910 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் வரையறுக்கப்பட்ட வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டது. அது கல்வி கற்ற சொத்துடையோருக்கான வாக்குரிமையாகக் காணப்பட்டதுடன் அவர்கள் தாய்மொழி தவிர ஆங்கில மொழி பேசத் தெரிந்தவர்களாகவும் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. இவர்கள் 1910 ஆம் ஆண்டு சனத்தொகையில் 4 % ஆவர். இவர்களுள் பெண்களுக்கு எவ்விதத்திலும் வாக்குரிமை வழங்கப்படவில்லை. எனவே சனத்தொகையில் ஒரு சிறுபகுதியினருக்கு வாக்குரிமை வழங்கியிருப்பது அநீதியான செயலாகும் என்ற டொனமூர் ஆணைக்குழு, நாட்டு நிர்வாகத்தில் பொது மக்கள் ஆர்வமும் ஈடுபாடும் கொள்ளாமல் இருப்பதற்கு இதுவே பிரதான காரணம் எனக் குறிப்பிடப்பட்டது.

எனவே 21 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள் அனைவருக்கும் வாக்குரிமையை டொனமூர் யாப்பு வழங்கியது. இங்கு கல்வி, சொத்து, பால் வேறுபாடு எதுவும் கவனத்திற் கொள்ளப்படவில்லை. பிரித்தானியாவில் கூட

1928 ஆம் ஆண்டிலேயே சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

செயற்பாடு - 01

“இலங்கையின் சுதந்திரத்திற்கான பாதையில் சர்வசன வாக்குரிமையானது சுதந்திரத்திற்கான ஒரு மைல் கல்லாக அமைந்தது” என்பதற்கான காரணங்கள் நான்கைக் குறிப்பிடுக.

செயற்பாடு - 02

“டொனமூர் யாப்பின் சிறப்பம்சம் இலங்கையருக்கு சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டமையாகும்.” மாணவர்கள் இரு அணிகளாகப் பிரிந்து ஆசிரியரின் உதவியுடன் மேற்சொன்ன தலைப்பில் ஒட்டிப் பேசியும் வெட்டிப் பேசியும் விவாதமொன்றை நடாத்துக.

## அரசுக்கழகம்

1833 கோல்புறூக் யாப்பில் சட்டவாக்கக் கழகம், சட்ட நிருவாகக் கழகம் எனும் இரு சபைகள் காணப்பட்டன. இங்கு சட்டம் இயற்றும் துறைக்கும் சட்டத்தைச் செயற்படுத்தும் துறைக்கும் தொடர்பு காணப்படவில்லை என்ற குறைபாட்டைக் கண்ட டொனமூர் அவ்விரு சபைகளையும் நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக “அரசுக் கழகம்” என்பதை அறிமுகப்படுத்தினார்.

**அரசுக்கழக அங்கத்தவர் (61)**

| தேர்தல் தொகுதி வாரியாக (50) | ஆளுநர் நியமனம் (08) | அரச உத்தியோகத்தர். (03) |
|---|---|---|
| | | பிரதான செயலாளர் 01 |
| | | நிதிச் செயலாளர் 01 |
| | | நீதி செயலாளர் 01 |

அரசுக் கழகத்தின் தலைவராக சபாநாயகர் காணப்பட்டார். அவரில்லாத போது சபை அமர்வுகளுக்கு உபசபாநாயகர் தலைமை வகித்தார்.

## நிர்வாகக் குழு முறை

அரசுக் கழகத்துக்குச் சட்டமியற்றும் அதிகாரம் போலவே நிர்வாக அதிகாரங்களும் வழங்கப்பட்டிருந்தன. எனவே சட்டவாக்கக் கழகத்தின் 58 உறுப்பினர்களும் 7 நிர்வாகக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர்.

01. உள்நாட்டு அலுவல்கள்.
02. விவசாயமும், காணியும்.
03. உள்ளூராட்சி
04. சுகாதாரம்.
05. தொழில், கைத்தொழில், வர்த்தகம்.
06. கல்வி
07. போக்குவரத்தும் பொது வேலைகளும்.

இந்த நிர்வாகக் குழுக்களின் தலைவர்கள் ஏழு பேரையும் உத்தியோகத்தர்களான பிரதம செயலாளர், சட்டச் செயலாளர், நிதிச் செயலாளர் மூவரையும் கொண்டதாக அமைச்சரவை அமைக்கப்பட்டது. அரச செயலாளர் மூவரையும் தவிர்ந்த ஏனைய அமைச்சர்களின் கீழ் திணைக்களங்கள் அமைக்கப்பட்டன. அரசுக் கழகத்தில் 3 அரச அதிகாரிகளுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கவில்லை.

ஆளுநருக்கும் அரச செயலாளர்களுக்கும் அரசாங்க அதிகாரங்களும் முக்கியமான அமைச்சுப் பொறுப்புக்களும் வழங்கப்பட்டமையை இலங்கைத் தலைவர்கள் எதிர்த்தனர். அவர்கள் ஆளுநரின் அதிகாரங்களைக் குறைக்குமாறும் அரச செயலாளர்களிடமிருந்த முக்கியமான அமைச்சுக்களை தேசியத் தலைவர்களிடம் ஒப்படைக்குமாறும் கோரி கிளர்ச்சி செய்தனர்.

## சோல்பரி யாப்பு - 1947

1931இல் வழங்கப்பட்ட டொனமூர் யாப்பினாலும் இலங்கையர் திருப்தியடையவில்லை. எனவே அவர்கள் கூடிய பொறுப்புக்களையுடைய ஒரு யாப்பையும் டொமினியன் அந்தஸ்தையும் கேட்டுக் கிளர்ச்சி செய்தனர்.

எனவே இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் 1944இல் பிரித்தானிய அரசாங்கம் சோல்பரிப் பிரபுவின் தலைமையில் ஓர் ஆணைக்குழுவை இலங்கைக்கு அனுப்பியது. இலங்கை அமைச்சர்களால் வரையப்பட்ட யாப்பில் காணப்பட்ட சிபார்சுகளை அடிப்படையாகக் கொண்டு 1947ஆம் ஆண்டு சோல்பரி யாப்பு அறிமுகப்படுத்தப்பட்டது.

### சோல்பரி யாப்பின் முக்கிய அம்சங்கள்

- ❖ ஆளுநர் பதவி இல்லாமலாக்கப்பட்டு ஆளுநர் நாயகம் எனும் பதவி ஏற்படுத்தப்பட்டது. பிரித்தானிய முடியின் பிரதிநிதியான ஆளுநர் நாயகம் ஒரு பெயரளவிலான நிர்வாகியாவார்.
- ❖ செனற்சபை, பிரதிநிதிகள் சபை எனும் இரு மன்றங்களைக் கொண்ட பாராளுமன்றம்.
- ❖ பிரதமர் தலைமையிலான அமைச்சரவை ஆட்சி.
- ❖ அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவும் நீதிச் சேவை ஆணைக்குழுவும்.

சோல்பரி அரசியல் யாப்பின்படி இலங்கையில் பாராளுமன்ற ஆட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வாட்சி முறையின் நிர்வாகத் துறை பிரதமர் தலைமையிலான அமைச்சரவையிடம் காணப்பட்டது. பிரதிநிதிகள் சபையில் பெரும்பான்மை அங்கத்தவரின் ஆதரவைப் பெற்ற ஒருவர் ஆளுநர் நாயகத்தால் பிரதமராக நியமிக்கப்பட்டார்.

- அமைச்சரவை (கெபினட்) பிரதமரின் விருப்பத்தின்படி உருவாக்கப்பட்டது.
- அவர்களில் இருவர் அல்லது இரண்டிற்கு மேற்பட்டோர் செனட் சபையிலிருந்து தெரிவு செய்யப்பட வேண்டியதோடு அவர்களில் ஒருவர் கட்டாயமாக நீதியமைச்சராயிருக்க வேண்டும்.
- ஏனைய அமைச்சர்கள் பிரதிநிகள் சபை உறுப்பினர்களிலிருந்து தெரிவு செய்யப்படுவதுடன் பாதுகாப்பு அமைச்சும் வெளிவிவகார அமைச்சும் பிரதமரின் கீழே செயற்படவேண்டும் என்பது கட்டாயமாகும்.
- புதிய யாப்பின்படி 1947 ஆகஸ்ட் மாதம் இலங்கையில் பொதுத் தேர்தல் ஒன்று நடாத்தப்பட்டது. அதிக ஆசனங்களைப் பெற்றுக்கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் டி. எஸ். சேனாநாயக்க அவர்கள் முதலாவது பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டார். இக்காலத்தில் சேர் ஹன்றி மங்மேசன் மூர் ஆளுநர் நாயகமாகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார்.

1947 சோல்பரி யாப்பின்படி பிரித்தானிய மகாராணியே இலங்கையின் தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்டார். ஆளுநர் நாயகம் மகாராணியின் பிரதிநிதியாக அவராலேயே நியமனம் செய்யப்பட்டார். மகாராணியின் சார்பில் ஆளுநர் நாயகத்தால் ஆற்றப்பட வேண்டிய நிர்வாக நடவடிக்கைகளை அமைச்சரவையே மேற்கொண்டது

இரு மன்றங்களைக்கொண்ட இலங்கைப் பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையில் 101 அங்கத்தவர் இடம்பெறுவர். இவர்களுள் சர்வசன வாக்குரிமை மூலம் தேர்தல் தொகுதிவாரியாக 95 பேரும் ஆளுநர் நாயகத்தால் 6 பேரும் தெரிவு செய்யப்பட்டனர். செனட் சபையில் 30 அங்கத்தவர் இடம் பெறுவர். இவர்களுள் 15 பேர் பிரதமரின் சிபாரிசின் பேரில் ஆளுநர் நாயகத்தாலும் 15 பேர் மக்கள் பிரதிநிதிகள் சபை உறுப்பினரின் வாக்குகள் மூலமும் தெரிவு செய்யப்படுவர்.

சோல்பரி யாப்பின் படி பிரதமரைத் தலைவராகக் கொண்ட அமைச்சர வைக்கே நிர்வாகப் பொறுப்பு வழங்கப்பட்டிருந்தது. பாராளுமன்ற உறுப்பினர்களுள் பெரும்பான்மையானவர்களின் ஆதரவைப் பெற்ற ஒருவர் பிரதம மந்திரியாக ஆளுநர் நாயகத்தால் நியமிக்கப்பட்டார். பிரதமரின் விருப்பின்படி அமைச்சரவை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் நீதிச் சேவையின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக நீதிச் சேவை ஆணைக் குழுவும், நிர்வாக சேவையின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக அரசாங்க சேவை ஆணைக் குழுவும் நியமிக்கப்பட்டன. நாட்டின் நிதி நடவடிக்கைகளுக்காக ''அரச பொது நிதி'' எனும் அமைப்பும் உருவாக்கப்பட்டது.

## அரசியல் யாப்புத் திட்ட வளர்ச்சி 1833 - 1947

| அறிமுகமான ஆண்டு | யாப்பின் / யாப்புச் சீர்திருத்தத்தின் பெயர். | உத்தியோக சார்பு அங்கத்தவர்கள். | உத்தியோக சார்பற்ற அங்கத்தவர்கள் | வாக்கு மூலம் தெரிவு செய்யப்பட்டோர் | ஆளுநரால் நியமனம் பெற்ற அங்கத்தவர்கள். | மொத்த அங்கத்தவர்கள் தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1833 | கோல்புறூக் கமரன் | 9 | 6 | - | 6 | 15 |
| 1912 | குறூ மக்கலம் | 11 | 10 | 4 | 6 | 21 |
| 1920 | மனிங் | 14 | 23 | 16 | 7 | 37 |
| 1924 | மனிங் - டிவன்சயர் | 12 | 37 | 29 | 8 | 49 |
| 1931 | டொனமூர் | 03 | - | 50 | 8 | 61 |
| 1947 | சோல்பரி | - | - | 95 | 6 | 101 |

செயற்பாடு

பின்வருவன பற்றி சிறுகுறிப்பு எழுதுக,

1. ஆளுநர் நாயகம். 2. செனட்சபை 3. அரச பொது நிதி 4. அமைச்சரவை

## நிர்வாக முறை (1796 - 1833 வரை)

ஆங்கிலக் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி 1796 ஆம் ஆண்டு இலங்கையின் கரையோரப் பிரதேசத்தைக் கைப்பற்றியது முதல் பிரித்தானிய நிர்வாகம் ஆரம்பமானது. அந்த வகையில் முதலாவது நிர்வாக மாற்றமாயமைந்த 1798 - 1802 வரை நிலவிய இரட்டை ஆட்சி முறைபற்றிப் பார்ப்போம்.

பிரித்தானிய முடியின் பிரதிநிதியான ஆளுநரும் ஆங்கிலக் கிழக்கிந்திய வர்த்தக கம்பனியும் ஒரே சமயத்தில் கரையோரப் பகுதிகளில் மேற்கொண்ட நிர்வாகம் 'இரட்டை ஆட்சி' முறை எனப்படும்.

ஆளுநர் ஒருவர் நியமிக்கப்படுவதை ஆரம்பம் முதலே விரும்பாத ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பனியானது இலங்கையின் ஆளுநருக்கு ஆட்சி நடவடிக்கைகளில் உதவ முன்வரவில்லை. அத்துடன் இலங்கை மக்களின் மொழி, சட்டதிட்டங்கள், சம்பிரதாயங்கள் பற்றித் தெரியாத ஆளுநர் திண்டாட்டத்திற்குள்ளானார். இக்காலகட்டத்தில் ஆட்சியில் நிர்வாக மத்திய நிலையமாகக் கச்சேரியே காணப்பட்டது. இம்முறையின் அதிகமான விடயங்கள் இன்றும் இலங்கையின் நிர்வாகத்தில் காணப்படுகின்றன.

இரட்டையாட்சியின் முரண்பாட்டுத்தன்மை பற்றித் தமது தாய் நாட்டு அரசாங்கத்திடம் ஆளுநர் பிரட்ரிக் நோர்த் முறைப்பாடு செய்தார். அதன் பயனாக இரட்டையாட்சி முறை இலங்கையிலிருந்து முற்றாக ஒழிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1802 ஆம் ஆண்டு முதல் ஆங்கிலேயரின் சிவில் சேவை நிர்வாகமும் திணைக்கள முறையும் இலங்கையின் கரையோர நிர்வாகத்தில் பயன்படுத்தப்பட்டதுடன், இலங்கை 1802 முதல் பிரித்தானியாவின் முடிக்குரிய குடியேற்ற நாடாக்கப்பட்டது. எனவே இதனை இலங்கையின் இரண்டாவது நிர்வாக முறையாக நாம் இனங்காணலாம்.

1802 இல் இலங்கையின் கரையோர நிர்வாகத்தில் ஏற்படுத்தப்பட்ட பாரிய மாற்றம், ஆங்கிலக் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் அதிகாரங்கள் நீக்கப்பட்டு நேரடியாக பிரித்தானிய முடியின் கீழ் கொண்டு வரப்பட்டமையாகும். எனவே பிரித்தானியாவின் ஏனைய குடியேற்றங்களில் காணப்பட்ட நிர்வாக முறை இலங்கையிலும் பின்பற்றப்பட்டது. என்றாலும் ஆங்கிலக் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியே தொடர்ந்தும் வர்த்தக உரிமையைக் கொண்டிருந்தது.

1815 இல் ஓர் ஒப்பந்தம் மூலம் கண்டி கைப்பற்றப் பட்ட பின்னர் மலையகப் பிரதேசம் பிரித்தானிய முறையில் அல்லாத சிங்கள சம்பிரதாயப்படியே ஆட்சி செய்யப்பட்டது. 1818 வரை இந்நிலை காணப்பட்டது. 1818இல்

ஆங்கிலேயருக்கெதிரான கிளர்ச்சி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து இந்நிலை மாறியது. அதுவரை கண்டி இராச்சிய நிர்வாகத்தில் கண்டிப் பிரதானிகளுக்கிருந்த அதிகாரங்கள் நீக்கப்பட்டு பிரித்தானிய பிரதிநிதிகளிடம் மலையகப் பகுதி நிர்வாகம் கையளிக்கப்பட்டது.

மலையக சுதந்திரப் போராட்டம், 1815இல் பிரித்தானிய ஆளுநரும் கண்டிப் பிரதானிகளும் செய்து கொண்ட ஒப்பந்தம் மீறப்பட்டதால் ஏற்பட்டதாகும். இக்கிளர்ச்சியை இராணுவ பலத்தால் அடக்கிய பிரித்தானிய நிர்வாகம் 1818 நவம்பர் 21 ஆம் திகதி வெளியிட்ட 56 வாசகங்களைக் கொண்ட '1818 மலையகப் பிரகடனம்' எனப்படும். இது ஓர் ஒப்பந்தமாக அமையாது ஆணையாக மட்டுமே அமைந்தது. அதன்படி 1818 - 1833 வரை கண்டிப் பகுதி ஆட்சி செய்யப்பட்டது.

நிர்வாகம் மற்றும் யாப்பு முறையிலான தீர்க்கமான மாற்றம் ஏற்பட்டது 1833 ஆம் ஆண்டிலாகும்.

## கோல்புறூக் யாப்பின் கீழ் நிர்வாக மாற்றங்கள் (1833 - 1948)

❖ கரையோரமும், மலையகமும், ஓரே ஆட்சி நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

❖ சிவில் சேவை மாற்றியமைக்கப்படுதல், செலவைக் குறைப்பதற்காக சிவில் சேவையாளர்களின் ஓய்வூதியம் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக அவர்களுக்குப் பெருந்தோட்டத்துறையில் ஈடுபட அனுமதி அளிக்கப்பட்டது.

❖ செலவுகளைக் குறைப்பதற்காக 16 மாகாணங்களாக இருந்த இலங்கை 5 மாகாணங்களாகப் பிரிக்கப்படுதல். ஒவ்வொரு மாகாணத்திற்கும் அரச அதிபர் ஒருவரும் உப அதிபர் ஒருவரும் பொறுப்பாயிருத்தல்.

❖ ஆங்கிலக் கல்வி முறை ஊக்குவிக்கப்பட்டது. அரச நிர்வாகத்திற்கான அடிமட்ட ஆளணியினரைப் பயிற்றுவிப்பதற்காகக் கல்வி நடவடிக்கைகளைச் சீர்திருத்தி அதனை அரசாங்கமே மேற்கொள்ளல்.

❖ கட்டாய சேவை இராஜகாரியமுறை நீக்கப்படல்.

❖ அரசின் வர்த்தக ஏகபோக உரிமை நீக்கப்பட்டு, தனியார்களின் சுதந்திரமான வர்த்தக நடவடிக்கைக்கு இடமளிக்கப்பட்டது.


❖ சட்டவாக்க சபை, சட்ட நிருபண சபை என்பன அறிமுகப்படுத்தப்படல்.

❖ முழு நாட்டிற்கும் பொதுவான நீதிமன்ற முறைமை அறிமுகப்படுத்தப்படல்.

## உள்ளூராட்சி முறை

நிர்வாகம் பற்றிக் கலந்துரையாடும் போது இலங்கையின் நிர்வாக மாவட்டங்கள் பற்றியும், உள்ளூராட்சி மன்றங்கள் பற்றியும் கவனஞ் செலுத்த

வேண்டியுள்ளது. கோல்புறூக் சீர்திருத்தங்களின் படி ஐந்து மாகாணங்களாக நாட்டின் மாகாணங்கள் குறைக்கப் பட்டமையால் பல பிரச்சினைகள் தோன்றின. அப்பிரச்சினை களுக்குத் தீர்வாக 1848 இல் வடமேல், 1873 இல் வட மத்திய, 1886 இல் ஊவா, 1889 இல் சப்ரகமுவ மாகா ணங்களும் உருவாக்கப்பட்டன.



கோல்புறூக் ஆணைக்குழுவின் சிபார்சின்படி 5 மாகாணப் பிரிவுகள்
படம் 1.1

துரிதமாக வளர்ச்சி கண்ட பெருந்தோட்டத் துறையுடன் இணைந்து வளர்ந்த பல்வேறு துறைகள் காரணமாக நாட்டினுள் நகரங்கள் உருவாகின. நகரங்களைத் தொடர்புபடுத்தும் பெருந்தெருக்கள் அமைக்கப்பட்டமையானது நகர அபிவிருத்திக்கு மேலும் துணைபுரிந்தது. இந்த நகர்ப்புறங்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காக சனத்தொகை அதிகரித்த போது அவர்களின் விசேட கட்டமைப்பு ஒன்று தேவைப்பட்டது. அதன் பயனாகவே மாநகரசபைகள் தோற்றம் பெற்றன.




இலங்கை 09 மாகாணங்களாக அதிகரித்தமை

மூலாதாரம் : கல்வி வெளியீட்டுத்திணைக்களம் 11 - 1995

படம் 1.2

## மாநகர சபை

1865 இல் கொழும்பு மாநகரசபையும் 1866 இல் கண்டி, காலி மாநகர சபைகளும் உருவாக்கப்பட்டன. இச்சபைகளில் அரச உத்தியோகத்தர்களும், மக்கள் பிரதிநிதிகளும் பணியாற்றினர்.

1920ஆம் ஆண்டை தொடர்ந்து சில நகரங்களில் உள்ளூராட்சிச் சபைகள் ஆரம்பிக்கப்பட்டன. இவற்றின் அங்கத்தவர்களில் அதிகமானோர் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களாவர். இதற்கு வாக்குரிமையைக் கையாண்டதன் ஊடாக மக்கள் நிர்வாகத்தில் பங்கு கொள்வதற்கான முன்னோடி வாய்ப்பொன்றைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது.

பிற்காலத்தில் மத்திய அரசாங்க நிர்வாகத்தில் பங்குபற்றியோர் இந்த உள்ளூராட்சி முறையில் அனுபவங்களைப் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே இச் சபைகள் எமது அரசியல்வாதிகளுக்கு முன் பயிற்சியளித்துள்ளது என்பது இதிலிருந்து தெரியவருகின்றது.

## கிராமசபை

பண்டைய சிங்கள மன்னராட்சிக் காலந்தொட்டே இலங்கையில் கிராமசபை முறை செயற்பட்டுவந்தது. இச்சபைகள் கிராம மக்களின் தேவைகளை நிறைவேற்றியதுடன் கிராமங்களை நிர்வகித்தும் வந்துள்ளன. இதன் முக்கியத்துவத்தை கோல்புறூக் உணர்ந்த போதும் கமறனின் நீதித்துறை சீர்திருத்தம் காரணமாக கிராமசபை முறை மறைந்துவிட்டது. இதுபற்றியும் ஏற்கெனவே நாம் கலந்துரையாடியுள்ளோம்.
கிராம சபையின் முக்கியத்துவத்துக்கு மீண்டும் புத்துயிர் அளிப்பதற்கு 1856ஆம் ஆண்டு கிராம சபையின் தன்மையிலான நீர்ப்பாசனத்துறை சட்டம் ஒன்று பிறப்பிக்கப்பட்டது. அதன்படி உருவாக்கப்பட்ட கிராமசபைகளின் தலைவர்களாக ஆரம்ப கட்டத்தில் பிரித்தானிய அரச முகவர் ஒருவர் பதவி வகித்த போதிலும் பின்னர் கிராம மக்களின் வாக்கு மூலம் தெரிவான அங்கத்தவர்கள் அதில் இடம் பிடித்தனர்.

1871ஆம் ஆண்டு கிராம சபைமுறை மறுசீரமைக்கப்பட்டது. அனுமதிக்கப்-பட்ட சட்டதிட்டங்களை மீறுவோருக்குத் தண்டனை வழங்குவதற்கும் கிராம சபைக்கு அதிகாரம் இருந்தது. எனவே அது வரை காலமும் மரபாகக் காணப்பட்ட நடைமுறைகளையும் சட்ட திட்டங்களாக்கிக் கொள்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டது.

1924ஆம் ஆண்டு விதிக்கப்பட்ட ஒரு கட்டளைச் சட்டத்தின்படி கிராமசபைகளின் தலைவராக மக்கள் பிரதிநிதி ஒருவரைத் தெரிவு செய்து கொள்ள முடிந்தது. 1933 இல் இம்முறை கட்டாயமாக்கப்பட்டது. அப்போதைய உள்ளூராட்சி நிர்வாகக் குழுத் தலைவராக இருந்த திரு.எஸ்.டபிள்யூ.ஆர்.டீ பண்டாரநாயக்க அவர்கள், கிராம சபையின் அதிகாரங்களை விஸ்தரித்து அவற்றைப் பலப்படுத்தினார். சுதந்திரம் பெறும்வரை அவ்வமைப்பு பாரிய மாற்றங்களின்றிச் செயற்படுத்தப்பட்டது.